සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ව්‍යාපාර සංඛ්‍යානය II
வணிகப் புள்ளிவிவரவியல் II
Business Statistics II

31 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

※ புள்ளிவிவர அட்டவணைகளும் வரைபுத் தாள்களும் வழங்கப்படும். **கணிப்பான்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படவில்லை.**

பகுதி I

1. (அ) தண்டு - இலை, பெட்டி - வீசல் வரைபடங்களின் பயன்பாடுகள் என்ன ?

கீழே உள்ள தரவுகள் ஒரு பரீட்சையின் 50 மாணவர்களின் புள்ளிகளைத் தருகின்றன.

94	78	68	73	53	84	67	85	60	64
76	98	85	74	82	43	62	52	92	88
34	54	72	48	79	71	66	58	91	84
59	69	83	77	72	60	38	81	75	69
68	76	85	59	46	74	76	42	93	65

(i) ஒரு வரிசையாக்கப்பட்ட தண்டு - இலை வரைபடம் அமைக்குக.

(ii) ஒரு பெட்டி - வீசல் வரைபடம் வரைக. இவ்வரைபடம் பற்றி உம்மால் என்ன கூறமுடியும் ?(07 புள்ளிகள்)

(ஆ) ஒரு தொழிற்சாலையின் ஊழியர்களின் வயதுகள் கீழ் உள்ள பரம்பலில் தரப்படுகின்றன.

வயதுகள் :	20 - 24	25 - 29	30 - 34	35 - 39	40 - 44	45 - 49	50 - 54	55 - 59
ஊழியர்களின் எண்ணிக்கை	35	45	70	100	90	80	50	30

திரள் மீடிறன் பல்கோணியை அமைக்குக. வரைபில் இருந்து 28 - 48 வயதுக்கு இடையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைக் காண்க. (05 புள்ளிகள்)

(இ) ஒரு கம்பனியின் இரு ஆண்டுகள் 2009, 2010 இற்கான மாதாந்த விற்பனைகள் (அலகுகளின் எண்ணிக்கை) தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன.

	J	F	M	A	M	J	J	A	S	O	N	D
2009	30	32	35	40	30	25	20	25	27	26	28	29
2010	35	37	40	45	33	27	21	30	31	32	33	35

ஒரு Z-வரைபடம் மூலம் இத் தரவுகளை சமர்பிக்குக. கம்பனியின் விற்பனை பற்றி விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

2. (அ) N நேர் அவதானிப்புகள் (positive observations) $X_1, X_2, \ldots X_N$ இன் பெருக்கல் இடையை வரையறுக்குக. கைத்தொழில் உற்பத்தி முதலாம் வருடத்தில் 3 வீதத்தினாலும், இரண்டாம் வருடத்தில் 4 வீதத்தினாலும் மூன்றாம் வருடத்தில் 6 வீதத்தினாலும் அதிகரிப்பின், மூன்று வருடங்களுக்கான சராசரி வருடாந்த அதிகரிப்பு என்ன ? (04 புள்ளிகள்)

(ஆ) ஒரு மாணவன் பொருளியல் பாடத்தில் 85 புள்ளி பெற்றான். இப்பாடத்திற்கான சராசரிப் புள்ளி 75 உம் நியம விலகல் 10 உம் ஆகும். வணிக புள்ளி விபரவியல் பாடத்தின் சராசரி புள்ளி 80, நியம விலகல் 15 இப்பாடத்தில் மாணவன் பெற்ற புள்ளி 90 ஆகும். ஒப்பீட்டளவில் அவன் எந்த பாடத்தில் உயர்வான நிலையில் உள்ளான் ? (04 புள்ளிகள்)

(இ) ஒரு குறிப்பிட்ட பரம்பலுக்கு பின்வரும் அளவீடுகள் கணிக்கப்பட்டுள்ளன.

$$Q_1 = 70, \quad Q_2 = 80, \quad Q_3 = 100, \quad P_{10} = 60, \quad P_{90} = 110$$

இப்பெறுமானங்களை பயன்படுத்தி ஓராயத்தின் ஒரு அளவீட்டையும் குடிலத்தின் ஓர் அளவீட்டையும் கணிக்குக. பரம்பலின் வடிவம் பற்றி நீர் என்ன கூறமுடியும் ? (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(ஈ) ஒரு குறிப்பிட்ட பரீட்சையின் சித்திப் புள்ளி 40 ஆகும். பரீட்சையில் சித்தி அடைந்த பரீட்சார்த்திகளின் புள்ளிகளின் பரம்பல் கீழே தரப்படுகின்றன.

புள்ளிகள்	மீடிறன்
40 - 44	5
45 - 49	10
50 - 54	15
55 - 59	30
60 - 64	6
65 - 69	4
	70

30 சித்தி அடையாத பரீட்சார்த்திகளின் புள்ளிகளையும் உள்ளடக்கிய புள்ளிகளின் மொத்த இடை, நியம விலகல் என்பன முறையே 48, 10 ஆகும். 30 சித்தி அடையாத பரீட்சாத்திகளினால் பெறப்பட்ட புள்ளிகளின் இடையை கணித்து நியமவிலகலை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

3. (அ) கீழே உள்ள தரவுகளை பயன்படுத்தி
   (i) இலாஸ்பியர் விலைச் சுட்டெண் (Laspeyre's)
   (ii) பாசே விலைச் சுட்டெண் (Paasche's)
   (iii) பிசர் விலைச் சுட்டெண்

என்பவற்றை 2007 இனை அடியாண்டாக கொண்டு 2010 இற்கு கணிக்குக. விலைச் சுட்டெண்ணை விமர்சிக்குக.

பண்டம்	2007		2010	
	விலை	அளவு	விலை	அளவு
A	6	8	10	5
B	8	5	12	3
C	4	10	8	5

மேலே உள்ள தரவுகளின் உதவியுடன் பிசர் விலைச் சுட்டெண் ஆனது கால புறமாற்று சோதனையை (Time reversal test) திருப்திபடுத்துகின்றது எனக் காட்டுக. (06 புள்ளிகள்)

(ஆ) கீழ் உள்ள அட்டவணை 2006 – 2010 காலத்திற்கான ஒரு தொகுதி கைத்தொழில் ஊழியர்களின் சராசரி மாதாந்த சம்பளத்தினை (ரூபாவில்) காட்டுகின்றது. 2006 இனை அடியாண்டாக கொண்டு இவ் ஆண்டுகளுக்கான நுகர்வோர் விலைச்சுட்டியும் தரப்படுகின்றன.

ஆண்டு	2006	2007	2008	2009	2010
சராசரி மாத சம்பளம் (ரூ.)	12 000	13 500	15 300	18 000	21 450
நுகர்வோர் விலை சுட்டி	100	150	170	240	320

(i) 2006 – 2010 காலப்பகுதிக்கான ஊழியர்களின் மெய் சம்பளங்களை தீர்மானிக்குக. அவர்களின் மெய் சம்பளங்களை விமர்சிக்குக.

(ii) ஊழியர்கள் 2006 ஆம் ஆண்டிற்கான வாழ்க்கைத்தரத்தினை 2010 இலும் கொண்டிருப்பதற்கு மேலதிக கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என கருதுகின்றீரா ? அவ்வாறாயின் இம் மேலதிக கொடுப்பனவிற்கான குறைந்தபட்ச அளவு என்னவாக இருக்க வேண்டும் ? (04 புள்ளிகள்)

(இ) காலாண்டு தரவுகளுக்கான பருவகால சுட்டிகளை மதிப்பிடுகின்ற நகரும் சராசரி விகித முறையினை பயன்படுத்துவதற்கான காரணங்களையும் செய்முறைகளையும் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ஈ) ஒரு சீமெந்து கம்பனியின் உற்பத்தியின் காலாண்டிற்கான தரவுகள் அவற்றின் பருவகால சுட்டிகளுடன் கீழே உள்ள அட்டவணையில் தரப்படுகின்றன.

காலாண்டு	வருடம்	உற்பத்தி (ஆயிரம் தொன்கள்)	காலாண்டு	வருடம்	உற்பத்தி (ஆயிரம் தொன்கள்)
Q_3	2008	115	Q_3	2009	172
Q_4	2008	152	Q_4	2009	177
Q_1	2009	163	Q_1	2010	191
Q_2	2009	162	Q_2	2010	180

பருவகால சுட்டி				
காலாண்டு	Q_1	Q_2	Q_3	Q_4
சுட்டி	105	97	95	103

(i) அரைச் சராசரி (semi average) முறையை பயன்படுத்தி 2012 இன் முதல் இரு காலாண்டுகளுக்கான போக்கு பெறுமானங்களை கணிக்குக.

(ii) 2012 இன் முதல் இரு காலாண்டுகளுக்கான உற்பத்தியை எதிர்வு கூறுக. (06 புள்ளிகள்)

4. (அ) கீழே உள்ள அட்டவணை ஆனது ஒரு ஆங்கில பரீட்சைக்காக 10 நபர்கள் படித்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையையும் (x), அவர்கள் அப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளையும் (y) தருகின்றது.

x	9	4	10	14	7	4	12	22	1	17
y	58	31	65	73	44	37	60	91	20	84

இங்கு $\Sigma X = 100,\ \Sigma X^2 = 1376,\ \Sigma Y = 563,\ \Sigma XY = 6944,\ \Sigma Y^2 = 36521$

(i) X, Y இற்கு இடையில் ஓர் ஏகபரிமான தொடர்பு உள்ளது எனக்கருதி X, Y ற்கு இடையிலான இணைபுக் குணகத்தைக் கணிக்குக. உமது முடிவை விமர்சிக்குக.

(ii) X மீதான Y இன் இழிவு வர்க்க பிற் செலவு கோட்டை மதிப்பிடுக.

(iii) பரீட்சைக்காக 12 மணித்தியாலங்கள் படித்த ஒரு நபரின் எதிர்பார்க்கப்பட்ட புள்ளியை (Test score) எதிர்வு கூறுக. (06 புள்ளிகள்)

(ஆ) 10 கலைஞர்களின் வேலைகளுக்கு இரு மதிப்பீட்டாளர்களினால் வழங்கப்பட்ட வரிசை நிலைகள் பின்வருமாறு :

மதிப்பீட்டாளர் A	6	2	4	5	9	3	1	10	8	7
மதிப்பீட்டாளர் B	2	4	5	8	10	1	6	7	9	3

வரிசை இணைபுக் குணகத்தை கணிக்குக. இரு மதிப்பீட்டாளர்களும் அவர்களின் வரிசைகளில் ஒத்து போகின்றார்களா என விளக்குக. (04 புள்ளிகள்)

(இ) ஒவ்வொன்றும் 100 உருப்படிகளைக் கொண்ட 10 மாதிரிகளில் உள்ள பழுதுகளின் எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணை தருகின்றது. P-அட்டவணையை அமைத்து இச் செயன்முறை கட்டுப்பாட்டில் உள்ளதா எனக் கூறுக.

மாதிரி இலக்கம்	1	2	3	4	5	6	7	8	9	10
பழுதுகளின் எண்ணிக்கை	5	9	12	4	10	8	7	15	12	6

(04 புள்ளிகள்)

(ஈ) ஒரு உற்பத்தியாளர் கூறுகளைக் கொண்ட பெரிய தொகுதிகளை தினமும் பெறுகின்றார். அவர் ஒரு ஏற்றுக்கொள் மாதிரி எடுத்தல் திட்டத்தை பயன்படுத்த தீர்மானிக்கிறார். இரு சாத்தியமான திட்டங்கள் கருதப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் 50 கூறுகளைக் கொண்ட ஒரு மாதிரியை பரிசீலனை செய்ய வேண்டி இருக்கின்றது.

திட்டம் A : ஒன்றிற்கும் அதிகமான பழுதடைந்த கூறுகள் இல்லாது காணப்படின் தொகுதியை ஏற்றுக் கொள்ளல்.

திட்டம் B : இரண்டு அல்லது அதற்கும் குறைவான பழுதடைந்த கூறுகள் காணப்பட்டால் தொகுதியை ஏற்றுக் கொள்ளல்

(i) புவசோன் அண்ணளவாக்கத்தை ஒவ்வொரு திட்டத்துக்கும் பயன்படுத்தி 2%, 4%, 8% பழுதடைந்த கூறுகளைக் கொண்டுள்ள ஒரு தொகுதியை ஏற்றுக் கொள்வதற்கான நிகழ்தகவைக் கணிக்குக.

(ii) பகுதி (i) இல் பெறப்பட்ட பெறுமானங்களை பயன்படுத்தி ஒவ்வொரு திட்டத்திற்குமான இயங்கு சிறப்பியல்பு வளையிகளை (operating characteristic curves) ஒரே அச்சுகளில் வரைக.

(iii) கீழே உள்ள சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் எத்திட்டம் மிகவும் பொருத்தமானதாக இருக்கலாம் ?

(அ) 2% பழுதுகளைக் கொண்ட தொகுதிகளை ஏற்றுக் கொள்வதற்கு உயர் நிகழ்தகவு இருக்க வேண்டும்.

(ஆ) 8% பழுதுகளைக் கொண்ட தொகுதிகளை ஏற்றுக் கொள்வதற்கான இடருக்கும் 2% பழுதுகளைக் கொண்ட தொகுதிகளை நிராகரிப்பதற்கான இடருக்கும் இடையில் ஒரு சமநிலை வேண்டப்படுகின்றது. (06 புள்ளிகள்)

பகுதி II

5. (அ) நிகழ்தகவின் பூர்வகால வரைவிலக்கணத்தையும், சார்பு மீடிறன் வரைவிலக்கணத்தையும் தருக. இவ்வரைவிலக்கணங்களின் குறைபாடுகள் என்ன ? (04 புள்ளிகள்)

(ஆ) A, B சாராநிகழ்ச்சிகள் எனின்,

(i) A', B' சாராநிகழ்ச்சிகள்

(ii) A', B சாராநிகழ்ச்சிகள்

எனக் காட்டுக.

இப்போது 40 வயது இனை உடைய மனைவி 70 வயது வரை உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவு $\frac{5}{12}$ உம் தற்போது 50 வயதினையுடைய கணவன் 80 வயது வரை உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவு $\frac{3}{7}$ உம் ஆகும். 30 வருடங்களின் பின்

(i) இருவரும் உயிருடன் இருத்தல்

(ii) ஒருவரும் உயிருடன் இல்லாதிருத்தல்

(iii) மனைவி மாத்திரம் உயிருடன் இருத்தல்

(iv) ஒருவர் மாத்திரம் உயிருடன் இருத்தல்

(v) ஆகக் குறைந்தது ஒருவர் உயிருடன் இருத்தல்

மேலுள்ளவற்றிற்கான நிகழ்தகவுகளைக் காண்க. (10 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

(இ) மொத்தநிகழ்தகவு விதியையும் பேய்ஸ் தேற்றத்தையும் (Bayse' Theorem) கூறுக.
வைத்தியர் A ஒரு நோயை சரியாக இனங்காணுவதற்கான நிகழ்தகவு 0.7 ஆகும். நோயைச் சரியாக இனங்கண்ட பிறகு அவரின் மருத்துவ முறையினால் நோயாளி இறப்பதற்கான நிகழ்தகவு 0.3 ஆகும். தவறான இனங்காணலினால் நோயாளி இறப்பதற்கான நிகழ்தகவு 0.8 ஆகும். இந்த நோயை உடைய, வைத்தியர் A இன் ஒரு நோயாளி இறந்துள்ளார். இவரின் நோய் சரியாக இனங்காணப்பட்டுள்ளது என்பதற்கான நிகழ்தகவு என்ன ? (06 புள்ளிகள்)

6. (அ) என்ன நிபந்தனைகளின் கீழ் ஒரு எழுமாற்றுமாறி ஆனது ஈருறுப்பு பரம்பலொன்றினால் மாதிரி உரு (mode) படுத்த முடியும் ?
ஒரு மாணவன் 10 வினாக்களைக் கொண்ட ஒரு சரி – பிழை பரீட்சைக்கு தோற்றுகிறான். அவன் இப்பரீட்சைக்கு பூரணமாக தயார்படுத்தப்படவில்லை. எனவே அவன் ஒரு கோடலற்ற நாணயத்தை சுண்டுவதன் மூலம் ஒவ்வொரு விடையையும் எழுமாறாக ஊகிப்பதற்கு திட்டமிடுகிறான்.
   (i) அவன் ஆகக் குறைந்தது 5 தடவைகளாவது சரியாக ஊகிக்கின்றான் என்பதற்குரிய நிகழ்தகவைக் கணிக்குக.
   (ii) ஆகக் குறைந்தது 9 தடவைகள் சரியாக ஊகிக்கின்றான் என்பதற்குரிய நிகழ்தகவைக் கணிக்குக.
   (iii) ஆகக் குறைந்தது n சரியான விடைகளை ஊகிப்பதற்குரிய நிகழ்தகவு $\frac{1}{2}$ இலும் குறைவாக இருக்குமாறு n இன் ஆக குறைந்த பெறுமானத்தைக் காண்க. (06 புள்ளிகள்)

(ஆ) ஒரு அனுமதிச் சீட்டு பெறும் இடத்தில் நண்பகல் 12 இற்கும் பிற்பகல் 3 இற்கும் இடையில் உள்ள வருகைகளின் எண்ணிக்கை ஆனது நிமிடத்திற்கு 1.2 இனை இடையாக கொண்ட புவசோன் பரம்பலினைக் கொண்டுள்ளது. பின்வருவனவற்றின் நிகழ்தகவினைக் காண்க.
   (i) கொடுக்கப்பட்ட 1 நிமிட ஆயிடையில் வருகைகள் இல்லை.
   (ii) 2-நிமிட ஆயிடையில் வருகைகளின் எண்ணிக்கை ஒன்றிலும் குறைவாக இருத்தல்.
   (iii) 5-நிமிட ஆயிடையில் வருகைகளின் எண்ணிக்கை இரண்டிலும் கூடவாக இருத்தல் (04 புள்ளிகள்)

(இ) எவ் நிபந்தனையின் கீழ் புவசோன் பரம்பலானது செவ்வன் பரம்பலினால் அண்ணளவாக்கப்பட முடியும் எனக் கூறுக. ஒரு பெரிய தொழிற்சாலையில் இயந்திரம் பழுதடையும் எண்ணிக்கை ஆனது புவசோன் செயன்முறைக்கு ஏற்ப கிழமைக்கு 9 எனும் விகிதத்தில் நிகழ்கின்றது. ஒரு கொடுக்கப்பட்ட கிழமையில் பழுதடைதலின் எண்ணிக்கை ஆனது 12 இனை விட அதிகமாக இருக்காது என்பதற்குரிய நிகழ்தகவை புவசோன் பரம்பலுக்கான செவ்வன் அண்ணளவாக்கத்தை பயன்படுத்தி கணிக்குக. (04 புள்ளிகள்)

(ஈ) உருக்கு கம்பிகள் 2 cm விட்டத்தில் இருக்குமாறு உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் விட்டம் 1.99 cm இற்கும் 2.01 cm இற்கும் இடையில் இருப்பின், இவை ஏற்றுக் கொள்ளப்படும். மிகைப் பருமன் (oversize) காரணமாக 5% உம், குறைந்த பருமன் (under size) காரணமாக 5% உம் நிராகரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விட்டங்கள் செவ்வன் பரம்பலில் உள்ளது எனக் கருதி பரம்பலின் நியம விலகலைக் கணிக்குக. இதிலிருந்து அனுமதிக்கப்படும் எல்லைகள் 1.985 cm இற்கும் 2.015 cm இற்கும் அகலமாக்கப்பட்டால் நிராகரிப்புகளின் விகிதம் என்னவாக இருக்கும் என்பதை கணிக்குக. (06 புள்ளிகள்)

7. (அ) பங்கு வீத மாதிரி எடுத்தல் என்றால் என்ன ?
பங்கு வீத மாதிரி எடுத்தலின் **இரு** நன்மைகள், **இரு** தீமைகளை விளக்குக.
N பருமனாக உள்ள ஒரு குடியில் இருந்து n பருமன் உடைய ஒரு முறைமையான மாதிரியை (systematic sample) நீர் எப்படி தெரிவு செய்வீர் என விபரிக்குக.
   (i) எழுமாற்று வரிசையில் உள்ள ஒரு குடி
   (ii) ஆவர்த்தன மாறலுடன் (periodic variation) உள்ள ஒரு குடி
   (iii) ஏகபரிமாண போக்குடன் (linear trend) உள்ள ஒரு குடி
முறைமையான மாதிரி எடுத்தலின் கீழ் மாதிரி இடையின் திட்பத்தை (precision) மேல் தரப்பட்ட குடி அமைப்புகள் ஒவ்வொன்றும் எவ்வாறு பாதிக்கும் என விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) $N=5$ ஆக உள்ள ஒரு குடியில் y_i இன் பெறுமானங்கள் 2, 3, 7, 8, 10 ஆகும். பருமன் 2 இனை கொண்ட எல்லா சாத்தியமான எளிய எழுமாற்று மாதிரிகளுக்கான மாதிரி இடை $\overline{y}$ இனைக் கணிக்குக. $\overline{y}$ ஆனது குடி இடை $\overline{Y}$ இன் கோடலற்ற மதிப்பான் என்பதை பரிசீலிக்குக. $\overline{y}$ இன் மாதிரி எடுத்தல் பரம்பலின் மாறற்திறனைக் கணிக்குக. இதனை, $\text{var}(\overline{y})$ இன் சூத்திரத்தில் இருந்து பெறப்பட்ட விடையுடன் ஒப்பிடுக. (08 புள்ளிகள்)

(இ) மைய எல்லைத் தேற்றத்தைக் கூறுக.
இடை $\mu=30$ நியம விலகல் $\sigma=6.3$ இனைக் கொண்ட குடியில் இருந்து $n=81$ பருமனை உடைய ஒரு எழுமாற்று மாதிரி எடுக்கப்படுகின்றது. $\overline{x}$ இற்கான நாம் பெற்ற பெறுமானம் 128.6 இற்கும் 131.4 இற்கும் இடையில் விழும் என்பதை என்ன நிகழ்தகவுடன் நாம் உறுதிப்படுத்த முடியும் ? (04 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

8. (அ) மரக்கறி எண்ணெய் போத்தல்கள் 750 ml எண்ணெயை கொள்ளும் என கருதப்படுகின்றன. ஒரு பரிசோதகர் 10 மரக்கறி எண்ணெய் போத்தல்களை கொண்ட ஒரு எழுமாற்று மாதிரியை எடுத்து அவற்றின் உள்ளடக்கங்களின் கன அளவை தீர்மானிக்கிறார்.

மாதிரியின் இடை, மாறற்திறன் என்பன $\overline{x} = 749.0$, $s^2 = 4.90$ ஆகும். ஒரு செவ்வன் பரம்பலைக் கருதி

(i) போத்தல்களின் உள்ளடக்கங்களின் இடையின் உண்மைப் பெறுமானத்திற்கான 90% நம்பிக்கை ஆயிடையை கணிக்குக.

(ii) இடை ஆனது 750 ml எனும் கருதுகோளினை 5% பொருண்மை மட்டத்தில் சோதிக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) இரு சாராத குடிகளில் இருந்து பெறப்பட்ட எழுமாற்று மாதிரிகள் பின்வரும் முடிவுகளைத் தருகின்றது என்க.

மாதிரி 1 : $n_1 = 100$ $\overline{x} = 47.0$

மாதிரி 2 : $n_2 = 120$ $\overline{y} = 48.0$

குடியின் மாறற்திறன்கள் $\sigma_1^2 = 16.0$, $\sigma_2^2 = 24.0$ எனின் $H_0 = \mu_1 = \mu_2$ எதிர் $H_1 = \mu_1 \neq \mu_2$ எனும் கருதுகோளினை 5% பொருண்மை மட்டத்தில் சோதிக்குக. சோதனையின் P-பெறுமானம் என்ன ? (04 புள்ளிகள்)

(இ) கீழ் உள்ள அட்டவணையானது 3 வேறுபட்ட இறப்பரில் இருந்து செய்யப்பட்ட டயர்களின் (tires) ஒப்பீட்டு ரீதியான பாவனைக் காலத்தினைத் தீர்மானிப்பதற்கு நடத்தப்பட்ட ஒரு சோதனையின் முடிவுகளைத் தருகின்றது. கணிப்பீட்டு இலகுவிற்கான எல்லா ஆரம்பத் தரவுகளில் இருந்தும் மாறிலி 35 கழிக்கப்பட்டுள்ளது.

இறப்பர் வகை		
இயற்கை	செயற்கை A	செயற்கை B
3	7	8
0	3	10
0	5	12
5	8	10

(i) இத்தரவுகளிற்கு ஒரு மாறல்திறன் பகுப்பாய்வு அட்டவணையை அமைக்குக.

(ii) மூலப் பொருட்களின் வகைகள் பாவனைக் காலத்தினை பாதிக்குமா என்பதை 5% பொருண்மை மட்டத்தில் சோதிக்குக.

(10 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

10808

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள்:

சுட்டெண் : ....

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ மேலே தரப்பட்டுள்ள **இடைவெளியில்** உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் **பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து, **அதன் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமான விடைகளைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினாத்தாள் I இற்காக	
வினா இல.	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

	கையொப்பம்	குறியீட்டு எண்
1 வது பரீட்சகர்		
2 வது பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
பிரதம பரீட்சகர்		
எண்கணிதப் பரீட்சகர்		

1. பின்வருவனவற்றுள் எது **விருப்பமாகக்** கருதப்படுகின்றது ?
   (1) தொடர்பாடல் (2) போக்குவரத்து (3) கல்வி (4) காப்புறுதி (5) சுகாதாரம் (......)

2. பொருட்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்
   - வசதிப் பொருட்கள்
   - கடைப் பொருட்கள்
   - விசேட (சிறப்பு) பொருட்கள்
   - நாடப்பெறா (நாடாப்) பொருட்கள்

   இவ்வகைப்படுத்தலானது எவ்வாறு அழைக்கப்படுகிறது.
   (1) நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் (2) குறுங்காலப் பாவனைப் பொருட்கள்
   (3) நுகர்வுப் பொருட்கள் (4) கைத்தொழில் பொருட்கள்
   (5) இடைநிலைப் பொருட்கள் (......)

3. வணிகச் சூழல் விசைகள் சில கீழே தரப்படுகின்றது.
   A – முகாமையாளர்கள் B – போட்டியாளர்கள்
   C – ஊழியர்கள் D – வாடிக்கையாளர்கள்
   E – உடைமையாளர்கள் F – எதிர்கால வணிகர்கள் (potential businessmen)
   G – விநியோகத்தர்கள்

   வேலைச் (பணிச்) சூழல் விசைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, C, E, G (2) B, D, F, G (3) A, B, D, F (4) B, D, E, G (5) B, C, F, G (......)

4. வணிகமொன்றின் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.
   A – வினைத்திறனான முகாமைத்துவம் B – தொழில் பாதுகாப்பு
   C – சமூகத்துக்கான சேவை D – வெளிப்படைத் தன்மை
   E – பாதுகாப்பான உற்பத்திப்பொருட்கள் F – சுகாதார வசதிகள்
   G – கழிவுப்பொருள் முகாமைத்துவம் H – வேலைவாய்ப்பை வழங்குதல்
   I – சமத்துவம்

   ஊழியர்களுடன் தொடர்புடைய சமூகப் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, D, F (2) B, E, H (3) C, F, G (4) A, D, I (5) B, F, I (......)

5. நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.
   A – தகவல்களைப் பெறுதல்
   B – பகுத்தறியக்கூடிய விழிப்புணர்வு (critical awareness)
   C – சமூக அக்கறை (social concern)
   D – தெரிவு (choice)
   E – சுகாதாரமான சூழலில் வாழுதல்
   F – சூழல் தொடர்பான விழிப்புணர்வு (Environmantal awareness)
   G – கவனத்தை ஈர்த்தல்
   H – ஐக்கியம் (solidarity)

   மேலே உள்ளவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, B, D, F (2) B, C, F, H (3) B, E, G, H (4) B, C, E, F (5) C, F, G, H (......)

(பக். 2 ஐப் பார்க்க

6. ISO 9001 : 2008 நியமமானது
   (1) சூழல் முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (2) உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (3) தர முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (4) சமூக வகைகூறலுக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (5) தொழில்சார் சுகாதார பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும். (……)

7. பங்குடைமைகளுடன் தொடர்புபட்ட வகையில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
   (1) ஆகக் குறைந்த பங்காளர் எண்ணிக்கை இரண்டாகக் காணப்படுவதுடன் ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கை இருபதாகக் காணப்படும்.
   (2) குறிப்பாக ஒரு வணிகத்தை நடத்த பங்காளர்கள் உடன்படுதல் வேண்டும்.
   (3) ஒவ்வொரு பங்காளரும் தனக்காகவும், பிறருக்காகவும் முகவராகவும் முதல்வராகவும் காணப்படுவர்.
   (4) எழுத்து வடிவிலான உடன்படிக்கை இல்லாமல் பங்குடைமை ஒன்றை கொண்டு நடத்துவது சாத்தியமில்லை.
   (5) பங்குடைமையில் சட்ட ரீதியான ஆளுமை காணப்படவில்லை. (……)

8. பங்குகளை அல்லது தொகுதிக் கடன் பத்திரங்களை வாங்கச் செய்வதற்கு பொதுமக்களை அழைப்பதற்காக வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றினால் வெளியிடப்படும் ஆவணம்
   (1) அமைப்பு அகவிதி (2) அமைப்புப் புறவிதி (3) நியதிச் சட்டப் பிரகடனப்படுத்தல்
   (4) பிரதிபயன் (5) முன்விவரணம் (……)

9. முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் தடையை ஏற்படுத்துகின்ற (hindering) மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற (fostering) காரணிகள் சில கீழே தரப்படுகின்றது.
   A – மனோநிலை (mindset) B – கற்பனையுடைய சிந்தனை (imaginary thinking)
   C – முன் மாதிரிகள் (role models) D – அதேமாதிரிப் பின்பற்றுதல் (replication)
   E – அனுபவங்கள் F – பாரம்பரியத் தன்மை (being traditional)

   மேற்கூறப்பட்டவற்றுள் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் தடைகளை ஏற்படுத்துகின்ற காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, D, F (2) B, C, E (3) B, C, D (4) C, D, E (5) D, E, F (……)

10. காசோலை குறுக்குக்கோடிடல் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளது.



   பொதுவான (சாதாரண) குறுக்குக் கோடிடல்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, B, C (2) A, D, E (3) B, D, E (4) B, E, F (5) C, D, E (……)

11. பின்வருவன இலங்கை மத்திய வங்கியின் சில நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகும்.
   A – நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
   B – பரிமாற்று வீதக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
   C – விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்
   D – நாணயங்களை வெளியிடுதலும் வழங்குதலும்
   E – நிதி முறைமையில் உறுதித்தன்மையைப் பேணுதல்

   மேற்கூறப்பட்டவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது.
   (1) A, B, C (2) A, C, E (3) B, D, E (4) C, D, E (5) A, B, D (……)

12. பின்வருவனவற்றுள் காப்புறுதியுடன் தொடர்புபட்ட வகையில் ஒரு கூற்று தவறானதாகும். **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
   (1) நபரொருவர் தனது உயிரின் மீது வரையறுக்கப்படாத காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
   (2) நபரொருவர் தனது வாழ்க்கைத் துணையின் (spouse) உயிரின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டிருக்கவில்லை.
   (3) தங்க நகைகளை அடைவு பிடிப்பவர் (pawn broker) தன்னிடம் அடைவு பிடிக்கப்பட்ட தங்க நகைகளுக்கெதிராக காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
   (4) நபரொருவர் தனது பிள்ளைகளின் அல்லது உறவினர்களின் உயிரின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டிருக்கவில்லை.
   (5) ஆயுளுறுதி மற்றும் தனிப்பட்ட விபத்துக்கள் தொடர்பான காப்புறுதிக்கு இழப்பீட்டுத் (நட்டாட்டு) தத்துவம் பொருத்தமானதல்ல. (……)

(பக். 3 ஐப் பார்க்க

13. போக்குவரத்துக்கான ஒரு சமமான அபிவிருத்தி அவசியமாக அமைவது
 (1) வேகத்தை அறிமுகப்படுத்தவும் பாதுகாப்பான போக்குவரத்து முறைகளுக்காகவும்.
 (2) நெடுஞ்சாலைகள், புகையிரதப்பாதைகள், நீர்வழிகளின் அபிவிருத்திக்காக.
 (3) துறைமுகங்கள், விமான நிலையங்கள், பேருந்து மற்றும் புகையிரத நிலையங்களின் அபிவிருத்திக்காக.
 (4) மேலும் மேலும் பேருந்துகள், லொறிகள், புகையிரதங்கள், விமானங்கள் மற்றும் கப்பல்களை உபயோகிப்பதற்காக.
 (5) பாதைகள், தரிப்பிடங்கள், ஊடகங்கள், சக்தி (வலு) ஆகியவற்றின் அபிவிருத்திக்காக. (......)

14. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தொடர்பாடல் ஊடகங்களையும் Y நிரலானது தொடர்பாடல் முறைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. வாய்மொழி மூலம் B. எழுத்து வடிவில் C. இலத்திரனியல் மூலம் D. அடையாளங்கள் மற்றும் குறியீடுகள் மூலம்	1. கடிதம் 2. கூட்டங்கள் 3. குரல் அஞ்சல் 4. மணி ஒலி (bell) 5. ஞாபகக் குறிப்பு (memo) 6. போக்குவரத்து வெளிச்சங்கள் (traffic lights) 7. கலந்துரையாடல்கள் 8. பேஜர்ஸ் (pagers)

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.
 (1) A – 2, 7 B – 1, 5 C – 3, 8 D – 4, 6
 (2) A – 2, 3 B – 1, 8 C – 4, 7 D – 5, 6
 (3) A – 2, 7 B – 1, 5 C – 6, 8 D – 3, 4
 (4) A – 2, 8 B – 1, 5 C – 3, 7 D – 4, 6
 (5) A – 1, 7 B – 2, 5 C – 3, 8 D – 4, 6 (......)

15. நிறுவனமொன்றின் இலக்குகளை அடைதல் எதன் மூலம் எடுத்துக் காட்டப்படு கின்றது.
 (1) முகாமைத்துவச் செயன்முறை (management process)
 (2) திட்டமிடல்
 (3) ஒழுங்கமைத்தல்
 (4) நெறிப்படுத்தல்
 (5) கட்டுப்படுத்தல் (......)

16. பின்வரும் அட்டவணையில் X நிரலானது முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் Y நிரலானது தொழிற் பாடுகளுக்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. திட்டமிடல்	1. பெறுபேறுகளை அளவிடுதலும், வேறுபாடுகளை இனங்காணுதலும்
B. ஒழுங்கமைத்தல்	2. ஊக்குவித்தலும் தொடர்பாடலும்.
C. நெறிப்படுத்தல்	3. அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை கையளித்தல்.
D. கட்டுப்படுத்தல்	4. இலக்குகள் மற்றும் நோக்கங்களை உருவாக்குதல்

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.
 (1) A – 1 B – 2 C – 3 D – 4
 (2) A – 3 B – 4 C – 2 D – 1
 (3) A – 2 B – 3 C – 4 D – 1
 (4) A – 4 B – 3 C – 2 D – 1
 (5) A – 4 B – 3 C – 1 D – 2 (......)

17. பின்வரும் அட்டவணையில் X நிரலானது சில ஒழுங்கமைத்தல் தத்துவங்களையும் Y நிரலானது அத்தத்துவங்களுக்கான வரைவிலக்கணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. கட்டளைச் சங்கிலி	1. ஒரு முகாமையாளருக்கு, நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான வலு.
B. கட்டுப்பாட்டு விசாலம்	2. மேற்பார்வையாளருக்கு, முடிவுகள் பற்றிய அறிக்கை சமர்ப்பிப் பதற்கான கடப்பாடும், வெளியீட்டை நியாயப்படுத்துதலும்.
C. அதிகாரம்	3. ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கீழுள்ளவர்களின் (ஊழியர்களின்) எண்ணிக்கை.
D. வகைகூறல்	4. மேல்மட்ட முகாமையில் இருந்து கீழ் மட்ட முகாமைக்கு அதிகாரம் பாய்ந்து செல்லும் முறை (வழி)

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.
 (1) A – 1 B – 3 C – 4 D – 2
 (2) A – 2 B – 3 C – 1 D – 4
 (3) A – 4 B – 3 C – 1 D – 2
 (4) A – 3 B – 4 C – 1 D – 2
 (5) A – 4 B – 1 C – 3 D – 2 (......)

18. உற்பத்திப்பொருளொன்றை வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொடர்பில் சகல மூலகங்களையும் (கூறுகளையும்) ஒருங்கிணைக்கின்ற மற்றும் கட்டுப்படுத்துகின்ற கணினி அடிப்படையிலான முறைமை எது ?
 (1) CAD
 (2) CAM
 (3) CIM
 (4) CNC
 (5) ரோபோக்கள் (Robotics) (......)

(பக். 4 ஐப் பார்க்க

19. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தளஅமைப்புக்கான முறைகளையும் Y நிரலானது அத்தள அமைப்புக்களுக்கான வரைவிலக்கணத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. செயன்முறைத் தளஅமைப்பு	1. ஒத்த தன்மையுடைய பகுதிகள் அல்லது செயன்முறைப்படுத்தலுக்கான தேவைப்பாடுகள் வேலைப் பிரிவுகளில் ஒன்றாக இணைத்து செய்யத் தக்கதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை
B. உற்பத்திப்பொருள் தள அமைப்பு	2. உற்பத்திப் பணிகள் தனித்தனிப் பிரிவுகளில் கொண்டு நடத்தத்தக்க முறையில் வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை
C. கலத் தளஅமைப்பு	3. உற்பத்திச் செயற்பாட்டுக்குத் தேவையான மூலப்பொருள், உபகரணங்கள், ஊழியர்கள் உற்பத்தி நடைபெறும் இடத்துக்கு வரத்தக்கதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை
D. நிலையான இடத் தள அமைப்பு	4. உற்பத்தி நடைமுறையானது தொடர்ச்சியாக ஒரு பகுதியில் இருந்து ஒருபகுதிக்கு ஒரு வரிசை அடிப்படையில் வேலைப் பிரிவுகளில் காணப்படக் கூடியதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 1 B – 4 C – 2 D – 3
(2) A – 2 B – 1 C – 4 D – 3
(3) A – 4 B – 2 C – 1 D – 3
(4) A – 2 B – 4 C – 3 D – 1
(5) A – 4 B – 1 C – 2 D – 3
(……)

20. பின்வரும் அட்டவணையில் X நிரலானது சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களையும் Y நிரலானது அவ்வெண்ணக்கருக்களுக்குப் பொருத்தமான விளக்கக் குறிப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. உற்பத்தி எண்ணக்கரு	1. இலக்குச் சந்தைக்கான தேவைகளையும், விருப்பங்களையும் வெளிக் காட்டுவதும், போட்டியாளர்களை விடவும் சிறந்த பெறுமதியில் விநியோகித்தலும்
B. உற்பத்திப்பொருள் எண்ணக்கரு	2. விற்பனையை தன் வயப்படுத்தக்கூடிய தன்மையும் மேம்படுத்தல் முயற்சிகளும் காணப்படும் பட்சத்தில் நுகர்வோர் உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்வார்கள் என்ற நம்பிக்கை.
C. விற்பனை எண்ணக்கரு	3. வாடிக்கையாளருக்கு சேவை புரிவதற்காக ஒரு நிறுவனத்தின் சகல பிரிவுகளும் ஒன்றிணைந்து வேலை செய்தல் என்ற அணுகுமுறை.
D. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு	4. சந்தையில், நியாயமான விலையில் புதிய அம்சங்களுடன் மிகவும் உயர்ந்த தரமுடைய பொருட்களை அவர்கள் வழங்கினால் அவற்றுக்கு சிறந்த கேள்வி காணப்படும் என்ற நம்பிக்கை.
E. முழுமைப் படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கரு	5. உற்பத்திப்பொருளொன்று சந்தையில் பரந்த அளவில் நியாயமான விலையில் கிடைக்குமாயின் நுகர்வோர் கொள்வனவு செய்வார்கள் என்ற அணுகுமுறை.

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 5 B – 1 C – 2 D – 4 E – 3
(2) A – 5 B – 4 C – 2 D – 1 E – 3
(3) A – 4 B – 5 C – 2 D – 1 E – 3
(4) A – 5 B – 4 C – 3 D – 1 E – 2
(5) A – 1 B – 3 C – 5 D – 2 E – 4
(……)

21. பின்வருவன சந்தைப்படுத்தற் கலவையில் உள்ளடங்கும் சில கருவிகள் (tools) ஆகும்.

A – பண்டக்குறி
B – கழிவு
C – விளம்பரப்படுத்தல்
D – விநியோக வழிமுறைகள்
E – போக்குவரத்து
F – பொதிகட்டல்
G – கொடுப்பனவு முறைகள்
H – தரம்
I – நேர் சந்தைப்படுத்தல்
J – உத்தரவாதங்கள் (warranties)
K – பொதுசனத் தொடர்புகள்
L – நிகழ்வுகளும் அனுபவங்களும்

மேற்குறித்தவற்றுள் ஒரு உற்பத்திப்பொருட் கருவிகளை **மட்டும்** உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, C, F, I (2) B, C, E, L (3) C, I, K, L (4) D, H, I, J (5) A, F, H, J (……)

22. உயர்தரமான பொருட்களுக்கு ஒரு நியாயமான குறைந்த விலையை நிர்ணயித்தல் எவ்வாறு அழைக்கப்படும் ?

(1) கிரயத்துடன் குறித்த வீத இலாபம் வைத்து விலையிடல் (markup pricing)
(2) இலக்குத் திரும்பல் விலையிடல் (target return pricing)
(3) உணரத்தக்க பெறுமதியில் விலையிடல் (perceived value pricing)
(4) பெறுமதி விலையிடல் (value pricing)
(5) நடைமுறை வீத விலையிடல் (going rate pricing)
(……)

(பக். 5 ஐப் பார்க்க

23. பின்வரும் அட்டவணையில் X நிரலானது நிதி முகாமையாளர்களின் பிரதான தீர்மானங்களையும் Y நிரலானது அப்பிரதான தீர்மானங்களுக்கு பொருத்தமான சிறிய தீர்மானங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. நீண்டகால முதலீட்டு தீர்மானங்கள்	1. வியாபார கடன்கொடுத்தோர் மீதான தீர்மானம்.
B. குறுங்கால முதலீட்டுத் தீர்மானங்கள்	2. வியாபாரக் கடன்பட்டோர் மீதான தீர்மானம்.
C. நீண்டகால நிதியிடல் தீர்மானங்கள்	3. நிறுத்தி வைத்த இலாபங்கள் மீதான தீர்மானம்.
D. குறுங்கால நிதியிடல் தீர்மானங்கள்	4. வணிகத்தை நவீனப்படுத்துவது தொடர்பான தீர்மானம்.

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 3 B – 1 C – 4 D – 2
(2) A – 2 B – 3 C – 4 D – 1
(3) A – 4 B – 1 C – 3 D – 2
(4) A – 3 B – 4 C – 2 D – 1
(5) A – 4 B – 2 C – 3 D – 1 (……)

24. பின்வருவனவற்றுள் மூலதனச் சந்தையின் உபசந்தைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) பங்குச் சந்தை, திறைசேரி உண்டியற் சந்தை, உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தை.
(2) திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை, பங்குச் சந்தை
(3) திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை, வணிகப் பத்திரச் சந்தை
(4) திறைசேரி உண்டியற் சந்தை, திறைசேரி முறிச் சந்தை, வணிகப் பத்திரச் சந்தை
(5) திறைசேரி உண்டியற் சந்தை, திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை (……)

25. மிகப் பெரியளவிலான கூறப்பட்ட மூலதனத்துடன் மிகவும் உயர்ந்தளவிலான கம்பனிகளைப் பட்டியற்படுத்துவதற்கான பட்டியற்திரை (board) எவ்வாறு அழைக்கப்படும்.

(1) திரிசவி பட்டியற்திரை
(2) இரண்டாம் தரப் பட்டியற்திரை
(3) பிரதான பட்டியற்திரை
(4) மீறுவோர் (default) பட்டியற்திரை
(5) காசுப் பட்டியற்திரை (……)

26. பின்வருவன ஊழியர் ஆட்சேர்ப்பு முறைகள் சிலவாகும்.

A – தொழிற் சந்தைக் கண்காட்சி (job fair)
B – திறமைப் பட்டியல்
C – இணைய வெப்தளம்
D – அக இணையம்
E – மரபுரிமைத் திட்டம்
F – தொழில்சார் நிறுவகங்கள்
G – கல்வி நிறுவனங்கள்
H – ஊழியர் சிபாரிசுகள் (employee referrals)

இவற்றுள் உள்வாரி ஆட்சேர்ப்பு முறைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது ?

(1) A, B, D, E (2) B, C, F, H (3) C, D, E, F (4) B, D, E, H (5) D, E, F, G (……)

27. பின்வரும் அட்டவணையில் X மற்றும் Y நிரல்கள், மனித வள முகாமைத்துவத்துக்குப் பொருத்தமான சில தகவல்களை எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. ஊழியருடைய உரிமைகள்	1. வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலையை பெற்றுக்கொள்வது.
B. ஊழியர்களது பொறுப்பு	2. சிறந்த ஒரு வேலைச் சூழலைப் பேணுதல்.
C. உடைமையாளரது உரிமைகள்	3. தொழில்சார் விபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல்.
D. உடைமையாளரது பொறுப்பு	4. நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வேலை செய்தல்.

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 2 B – 1 C – 3 D – 4
(2) A – 1 B – 2 C – 3 D – 4
(3) A – 3 B – 2 C – 1 D – 4
(4) A – 4 B – 3 C – 1 D – 2
(5) A – 3 B – 4 C – 1 D – 2 (……)

28. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தகவல்கள் வகைப்படுத்தப்படும் அடிப்படைகளையும், Y நிரலானது ஒவ்வொரு அடிப்படைக்கும் பொருத்தமான வகைப்படுத்தலையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. மூலம் (source)	1. நிகழ் காலம் மற்றும் இறந்த காலம்.
B. தன்மை (nature)	2. அளவு ரீதியானவை. தர ரீதியானவை (quantitative & qualitative)
C. முகாமைத்துவ மட்டங்கள்	3. உள்வாரியானவை வெளிவாரியானவை.
D. காலம் (time)	4. உபாய ரீதியானவை, செயற்பாட்டு ரீதியானவை.

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 2 B – 3 C – 4 D – 1
(2) A – 3 B – 2 C – 4 D – 1
(3) A – 3 B – 4 C – 2 D – 1
(4) A – 1 B – 2 C – 4 D – 3
(5) A – 4 B – 2 C – 3 D – 1 (……)

(பக். 6 ஐப் பார்க்க

29. நிறுவனமொன்றின் முற்று முழுதான தொடர்பாடல்களையும் மேம்படுத்துவதற்கு சொல் முறைவழிப்படுத்தல் (word processing), மின்னஞ்சல், குரல் அஞ்சல், பேஜர்ஸ் (pagers) ஆகிய தகவல் தொழினுட்ப கருவிகளைப் பயன்படுத்தும் தகவல் முறைமை எவ்வாறு அழைக்கப்படும் ?
   (1) கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS)
   (2) அலுவலக தன்னியக்க முறைமை (OAS)
   (3) முகாமைத்துவ உதவி முறைமை (MSS)
   (4) தீர்மான உதவி முறைமை (DSS)
   (5) நிறைவேற்று உதவி முறைமை (ESS) (......)

30. முற்று முழுதான வணிகத் திட்டம் பற்றிய ஒரு முன் கருத்தை (pre - idea) எப்பகுதியை வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் ?
   (1) உள்ளடக்கப் பக்கம் (2) நிறைவேற்றுகைச் சுருக்கம் (3) வணிக விவரணம்
   (4) சந்தைப்படுத்தல் திட்டம் (5) நிதித் திட்டம் (......)

● **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.

31. வணிகமொன்றின் அகச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் .... மற்றும் .... ஆகியவற்றை இனங்காண முடிவதுடன், புறச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் .... மற்றும் .... இனங்காண முடியும்.

32. (அ) நல்லதைச் செய் மற்றும் கூடாததைச் செய்யாதே என்பதனால் கருதப்படுவது .... ஆகும்.
   (ஆ) சூழல் சீரழிவுக்குக் காரணமான அல்லது கலாசார ரீதியாகப் பொருத்தமற்ற நடவடிக்கைகளை உள்நாட்டு மக்களின் காணிகளில் மேற்கொள்வதனை இல்லாது செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் அங்கத்தவர்களால் கைமொப்பம் இடப்பட்ட ஒப்பந்தம் .... என அழைக்கப்படும்.

33. வருமான வரி மற்றும் கூட்டுரு வரி ஆகியவை .... வரி ஆகக் கருதப்படுவதுடன், சுங்கத் தீர்வைகள், மற்றும் கலால் வரிகள் ஆகியவை .... வரி ஆகக் கருதப்படுகின்றன.

34. (அ) அதனுடைய தாய் நிறுவனத்தில் இருந்து சட்ட ரீதியாகத் தனிப்பட்ட மற்றும் வேறுபட்ட வகையில் காணக்கூடியதாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து உருவாக்கும் ஒரு புதிய வணிக அலகு .... என அழைக்கப்படும்.
   (ஆ) அங்கீகாரம் வழங்குபவரின் வியாபாரப் பெயரைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் உரிமை வழங்கப்படும் அங்கீகார வணிகம் .... என அழைக்கப்படும்.

35. (அ) வணிக நிறுவனமொன்றின் ஊழியர்களது ஆக்கத்திறனூடாக உருவாகும் முயற்சியாண்மை .... என அழைக்கப்படும்.
   (ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து செயற்படுத்தும் கடன் திட்டம் .... என அழைக்கப்படும்.

36. (அ) ATM அட்டையை அதற்கான தன்னியக்க ரெல்லர் இயந்திரத்தினுள் உட் செலுத்திய பின்னர் ஒரு கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கான .... பதிவு செய்வது தேவையானதாகும்.
   (ஆ) தற்போது உலகளாவிய ரீதியில் மிகவும் பிரசித்தி பெற்ற இருவகைக் கடன் அட்டைகளாவன .... யும் .... யும் ஆகும்.

37. (அ) வழங்கப்பட்ட காலம் தொடர்பில், ஒரு நாட்டின் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் .... என அழைக்கப்படும்.
   (ஆ) இணையத்தளத்தினூடாக பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஏனைய முந்திய மற்றும் பிந்திய சகல நடவடிக்கைகளும் .... என அழைக்கப்படும்.

(பக். 7 ஐப் பார்க்க

38. (அ) ஒரே வகையான குழுக்கள் தொடர்புபட்ட வகையில் முழுச் சந்தையின் சிறிய ஒரு பிரிவாகக் காணப்படுவது .... என அழைக்கப்படும்.

(ஆ) பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

சந்தைப்படுத்தல் கலவை விற்பனையாளரது நோக்கில்	சந்தைப்படுத்தல் கலவை நுகர்வோரது நோக்கில்
1. உற்பத்திப்பொருள்	1. ....
2. விலை	2. ....
3. இடம்/விநியோகம்	3. ....
4. மேம்படுத்தல்	4. ....

39. (அ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காகவும் முறைப் படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட நிறுவகம் .... என அழைக்கப்படும்.

(ஆ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பங்குக் கொடுக்கல்வாங்கலைத் தீர்த்து வைக்கும் மையமாக (நிறுவனமாக) பணியாற்றும் நிறுவகம் .... என அழைக்கப்படும்.

40. (அ) இணைய வெப்தளங்களில் இருந்து கோவைகளை (files) மாற்றல் (transfer) செய்வதற்கும், பதிவிறக்கம் (download) செய்வதற்கும் பயன்படுத்தப்படும் முறை .... என அழைக்கப்படும்.

(ஆ) ஒரு நபருக்கான அல்லது ஒரு நிறுவனத்துக்கான இணைய வசதிகளை ஒரு .... ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

41. உற்பத்தியானது தன்மை அடிப்படையில் மூன்று பிரதான பிரிவுகளாகவும் துறை அடிப்படையில் மூன்று பிரதான பிரிவுகளாகவும் வகைப்படுத்தப்பட முடியும். பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி தனித்தனியாக அம்மூன்று பிரதான பிரிவுகளையும் குறிப்பிடுக.

தன்மை அடிப்படையில்	துறை அடிப்படையில்
1.	1. ....
2.	2. ....
3.	3. ....

42. (அ) நியாயமற்ற வியாபார நடைமுறைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் உருவாக்கப் பட்டுள்ள அரசாங்க நிறுவகம் எது ?

....

(ஆ) நீர் குறிப்பிட்ட இந்நிறுவகம் எந்த அமைச்சின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுக.

....

43. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

(பக். 8 ஐப் பார்க்க

44. (அ) "சுயாதீனமாகவும் சொந்தமாகவும் உருவாக்கிச் செயற்படுத்தக்கூடியதும் அதனது துறைவாரியான செயற்பாட்டில் மேலாதிக்கம் செலுத்த முடியாததுமான ஒன்று சிற்றளவு வணிகமாகும்" மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் எந் நிறுவனத்தினூடாக முன்வைக்கப்பட்டது ?

....

(ஆ) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்களின் **நான்கு** பிரதான பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.

1. ....

2. ....

3. ....

4. ....

45. (அ) EU, WTO, ASEAN, SAARC ஆகிய அமைப்புக்களுள், எதனை வியாபாரக் கூட்டணியாகக் (trade bloc) கருதமுடியாது ?

....

(ஆ) இறக்குமதி செய்த பொருட்களை துறைமுகத்துக்கு வெளியே கொண்டுவந்து செயன்முறைக்கு உட்படுத்தியோ அல்லது செயன்முறைக்கு உட்படுத்தாமலோ மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு உபயோகிக்கப்படும் சொற்பதம் யாது ?

....

46. (அ) நிறுவனமொன்றின் நோக்கம், அடிப்படை இலக்குகள் மற்றும் தத்துவங்களை விவரிக்கும் கூற்று யாது ?

....

(ஆ) சரியான தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களுக்கு விட்டுக் கொடுக்கும் தலைவரது தலைமைத்துவப் பாங்கு (leadership style) எது ?

....

47. (அ) தொடர்ச்சியாக ஒரு உற்பத்தி வரிசையில் ஒரே இயல்பான பொருட்களை பேரளவு அடிப்படையில் உற்பத்தி செய்யும் உற்பத்தி முறை எது ?

....

(ஆ) உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பு வீதத்திற்கு வழங்கப்படும் சொற்பதம் யாது ?

....

The National e-learning Portal for the General Education

48. (அ) ஒருவரது கல்வி, அனுபவம், திறன்கள் உள்ளடங்கலாக வேலைக்கு மிகவும் பொருத்தமான நபரின் வகையை விவரிக்கும் கூற்று எது ?

....

(ஆ) முக்கியமான பதவி நிலைகளுக்குச் சாத்தியமான பிரதியீடுகளை இனங்காண்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் யாது ?

....

49. பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஒரு கணினி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையின் கூறுகளுக்கான (மூலகங்களுக்கான) உதாரணங்களைத் தருகின்றது. இவ்வுதாரணங்களுக்கு மிகவும் பொருத்தமான கூறுகளை Y நிரலில் அதற்கு எதிராக எழுதுக.

X	Y
1. வின்டோஸ் (Windows)	1. ....
2. கணினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (Computer Programmer)	2. ....
3. திரை (monitor)	3. ....
4. விதிகளும் பிரமாணங்களும் (Rules and regulations)	4. ....

50. (அ) வணிகத் திட்டமொன்றில், மதிப்பிடப்பட்ட காசுப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் காசு மீதிகளை எடுத்துக் காட்டும் ஆவணத்தின் பெயர் என்ன ?

....

(ஆ) வணிகத் திட்டமொன்றின் எப்பிரிவில் மதிப்பிடப்பட்ட இயந்திரங்களுக்கான கிரயம் மற்றும் மூலப்பொருட்களுக்கான தேவைப்பாடுகள் போன்றன எடுத்துக் காட்டப்படுகின்றது.

....

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව **ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව** ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் **இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்** இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka **Department of Examinations, Sri Lanka** Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ව්‍යාපාර අධ්‍යයනය	II
வணிகக் கல்வி	II
Business Studies	II

32 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

அறிவுறுத்தல்கள் :

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

பகுதி I

1. பின்வரும் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி (i), (ii), (iii) ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.

"மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, விநியோகம், வியாபாரம் ஆகியவற்றையும் இவற்றுடன் தொடர்புடைய ஏனைய சகல சேவைகளையும் உள்ளடக்கிய இலாபத்தை நோக்காகக் கொண்ட எந்தவொரு நடவடிக்கையும் வணிகமாகும்."

(i) முதலீட்டாளர்களுக்கு இலாபத்தை வழங்குவதற்கு மேலதிகமாக வணிகத்தில் இருந்து ஏனைய அக்கறையுடைய தரப்பினர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள பின்வரும் எண்ணக்கருக்களை விவரிக்குக.
(அ) தேவைகளும் விருப்பங்களும்
(ஆ) பொருட்களும் சேவைகளும் (04 புள்ளிகள்)

(iii) (அ) "வியாபாரத்தை" வரையறுக்க.
(ஆ) துணைநிலைச் சேவைகளைக் குறிப்பிடுக.
(இ) முதனிலை உற்பத்தியையும் இரண்டாம் நிலை உற்பத்தியையும் ஒப்பிடுக.
(ஈ) விநியோகத்தில் பங்குபற்றும் இடைநிலை வணிகர்கள் **இருவரைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகமொன்றின் அகச் சூழல் விசைகளைக் குறிப்பிடுக.
(ஆ) நீர் குறிப்பிட்ட அவ்விசைகளுள் ஏதாவது **இரண்டைத்** தெரிவு செய்து, அவை எவ்வாறு வணிக நடவடிக்கைகளில் (செயல்திறனில்) செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனைத் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் எண்ணக்கருக்களை வணிக ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட வகையில் விளக்குக.
(அ) உண்மையானவைகளை எடுத்துக் கூறுதல் (Communicate truthfully)
(ஆ) மற்றவர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல் (Not causing harm to others) (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (i) (அ) அரசாங்கமொன்றின் **நான்கு** பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.
(ஆ) அரசாங்கமொன்றின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு, வணிகம் பங்களிப்புச் செய்யும் **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) அரசாங்கமொன்றின் வருமானத்தின் பிரதான மூலங்கள் நேர் மற்றும் நேரில் வரிகள் ஆகும். நேர் மற்றும் நேரில் வரிகளை உதாரணங்களுடன் தனித்தனியாக விளக்குக.
(ஆ) "GMP சான்றுறுதிப்படுத்தல்" என்பதனால் கருதப்படுவது யாது ?
(இ) உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சில உணவுப் பொருட்களுக்கு SLS சான்றுறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானதாகும். அவ்வாறான **இரண்டு** உற்பத்திப்பொருட்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆஜித், பிரகதி, செபி ஆகியோர் பங்குடைமை ஒன்றைக் கொண்டு நடத்துகின்றனர். பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அவர்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றது.

1. இலாப நட்ட விகிதம்
2. ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துக்கான வட்டி
3. பிரகதியும், செபியும் இயங்கும் பங்காளராகக் காணப்படுவதனால் அவர்கள் சம்பளத்தைக் கோருகின்றனர்.
4. ஆஜித் தன்னால் வழங்கப்பட்ட கடனுக்கு வட்டியைக் கோருகின்றார்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக பங்குடைமை உடன்படிக்கையில் எந்தவொரு கருத்துக்களும் காணப்பட வில்லை. 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைச் சட்டத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதனைத் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் தனியார் கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்காகக் கம்பனிப் பதிவாளரிடம் விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(v) (அ) அங்கீகார வணிகம் என்றால் என்ன விளக்குக.
(ஆ) அங்கீகார வணிகத்தின் மூலம் அங்கீகாரம் வழங்குபவரும், அங்கீகாரம் பெறுபவரும் அடைந்து கொள்ளும் **மூன்று** அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (i) (அ) முயற்சியாளர், முயற்சியாண்மை மற்றும் முயற்சி (venture) ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை விளக்குக.
(ஆ) முயற்சியாளர்கள் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் பின்புலக் காரணிகள் **நான்கை** விளக்குக. (04 புள்ளிகள்)
(ii) 2012 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சிறிய நடுத்தர வணிகங்களின் (SME) அபிவிருத்திக்காகப் பிரேரிக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)
(iii) (அ) "பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது" என்பது சிறந்த பணத்தின் ஒரு சிறப்பியல்பு ஆகும். ஆனால் பணமானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமாயின் வேறு சில சிறப்பியல்புகளையும் நிறை வேற்ற வேண்டியுள்ளது. அவ்வாறான சிறப்பியல்புகள் **நான்கைக்** குறிப்பிடுக.
(ஆ) பின்வரும் பண வகைகளை விளக்குக.
1. கடன் பணம் 2. சட்டப் பணம் (04 புள்ளிகள்)
(iv) இலங்கையின் நிதி முறைமையைக் கண்காணிக்கும் அமைப்பு இலங்கை மத்திய வங்கி ஆகும். இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களைக் குறிப்பிடுவதுடன் இந்நோக்கங்கள் எவ்வாறு அடைந்து கொள்ளப்படுகின்றன என்பதனையும் விளக்குக. (04 புள்ளிகள்)
(v) தற்போது பெரும்பாலான வங்கிச் சேவைகள் இலத்திரனியல் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது. இலத்திரனியல் வங்கிச் சேவைகள் **நான்கை** விளக்குக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (i) (அ) பின்வருவன தொடர்பில் காப்புறுதியின் அனுகூலங்களைத் தனித்தனியாக விளக்குக.
1. தனிப்பட்டோர் மற்றும் குடும்பம் (individual and family)
2. வணிக நிறுவனம் (அலகு) (Business entity)
(ஆ) காப்புறுதி தொடர்பில் பின்வரும் பதங்களை விளக்குக.
1. இடரும் காரணமும் (Risk and cause)
2. நட்டங்களும் சேதங்களும் (Loss and damages) (04 புள்ளிகள்)
(ii) கடந்த அண்மைக் காலத்தில் இலங்கையின் வீதிப் போக்குவரத்து முறைமையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஆகும். வினைத்திறனான வீதிப் போக்குவரத்துக்கு இவ்வகையான அதிவேக நெடுஞ்சாலைகள், எவ்வாறு வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)
(iii) ஒரு தொடர்பாடல் செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள துலங்கல் (response), பின்னூட்டல் ஆகியவற்றைத் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)
(iv) "சிறப்புச் சந்தைகள்" என்பது சில்லறை வியாபாரத்தில் காணப்படும் ஒரு புதிய போக்கு ஆகும். நுகர்வோர் இடையே இச்சிறப்புச் சந்தைகள் பிரசித்தமாகக் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்க. (04 புள்ளிகள்)
(v) (அ) மொத்த வியாபாரத்தை வரையறுக்குக.
(ஆ) **இரு** வகையான மொத்த வியாபாரிகளைக் குறிப்பிடுக.
(இ) ஒரு மொத்த வியாபாரியின் **நான்கு** தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி II

5. (i) நிறுவன இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவச் செயன்முறையானது எவ்வாறு உதவுகின்றது என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)
(ii) (அ) நெறிப்படுத்தல் என்றால் என்ன ?
(ஆ) சிறந்த தலைவர் ஒருவரின் சிறப்பியல்புகள் **நான்கைக்** குறிப்பிடுக.
(இ) ஜனநாயகத் தலைமைத்துவப் பாங்கை விவரிக்குக. (04 புள்ளிகள்)
(iii) (அ) அதிகாரத்தைக் கையளிப்பதனால் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ?
(ஆ) சில சமயங்களில் திட்டங்கள் தோல்வி அடைகின்றன. திட்டங்கள் தோல்வி அடைவதற்கான **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(iv) (அ) செயற்பாட்டு முகாமைத்துவத்தின் உருமாற்றச் செயன்முறையின் தன்மையை எடுத்துக்காட்டுக.
(ஆ) சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு முறை என்ற வகையில் அதே நேரத் தந்திரோபாய முறைமையின் (JIT) முக்கியத்துவத்தை விளக்குக. (04 புள்ளிகள்)
(v) ஒப்பந்தகாரர் ஒருவர் விளையாட்டுக்கான பல்கூட்டுக் கட்டடத்தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கான ஒப்பந்த மொன்றைப் பெற்றுக் கொண்டார். இக்கட்டுமானத்துக்கு மிகவும் பொருத்தமான தளஅமைப்புத் திட்டத்தைக் குறிப்பிடுக. நீர் குறிப்பிட்ட தளஅமைப்புத் திட்டத்தின் தன்மையை விளக்குக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

6. (i) (அ) உற்பத்திப்பொருள் ஒன்றின் தரம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்குக.
(ஆ) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.
1. மொத்த தர முகாமைத்துவம் (TQM)
2. சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் மையச் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை விளக்குக.
1. பெறுமதியும் (value) திருப்தியும்
2. பரிமாற்றமும் கொடுக்கல்வாங்கல்களும் (04 புள்ளிகள்)

(iii) வாடிக்கையாளர்களுக்கு மிகவும் உயர்வான பெறுமதியை வழங்குவதற்காக, சந்தைப்படுத்துவோர் தமது உற்பத்திப்பொருட்களை வேறுபட்ட மட்டங்களில் வழங்குகின்றார்கள். உற்பத்திப்பொருள் மட்டங்களை வரிசைக் கிரமமாகக் குறிப்பிடுவதுடன் அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) திரு. மகீபன் விவசாயத் துறையில் தான் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டு அறுவடை செய்வதற்கான புதிய இயந்திரமொன்றை வடிவமைத்தார். இவ்வியந்திரத்தின் வினைத்திறனானது அதற்குரிய விவசாய அமைப்புக்களால் சான்றுறுதி செய்யப்பட்டிருந்தது. அவர் இவ்வியந்திரத்தை உற்பத்தி செய்து சந்தைக்கு அறிமுகப்படுத்தத் தயாராக இருந்தார். இவ்வியந்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு பொருத்தமான மேம்படுத்தற் கருவி பற்றி அவர் தற்போது கருத்திற் கொள்கின்றார்.
வணிகக் கல்வியை கற்ற மாணவன் என்ற வகையில் மகீபனின் அறுவடை செய்யும் இயந்திரத்தைச் சந்தைக்கு அறிமுகஞ் செய்ய மிகவும் பொருத்தமான மேம்படுத்தற் கருவியைச் சிபாரிசு செய்வதுடன் உமது சிபாரிசுக்கான காரணங்களையும் தருக. (04 புள்ளிகள்)

(v) (அ) வணிகமொன்றின் தொழிற்படு மூலதனம் என்றால் என்ன ?
(ஆ) போதுமான அளவு தொழிற்படு மூலதனம் காணப்படாதபோது ஏற்படக்கூடிய எதிர் விளைவுகள் யாவை ?
(இ) போதுமான அளவு தொழிற்படு மூலதனம் இல்லையேல், தொழிற்படு மூலதனத்தை அதிகரித்துக் கொள்வதற்கு, எடுக்கப்படக்கூடிய குறுங்கால நடவடிக்கைகள் எவை ? (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. (i) பின்வருவன வரையறுத்த அகிலா கம்பனியின் ஐந்தொகையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.
- சாதாரண பங்கு மூலதனம் ரூ. 10 மில்லியன்
- முன்னுரிமைப் பங்கு மூலதனம், 10%, ரூ. 8 மில்லியன்
- தொகுதிக் கடன்கள் 12%, ரூ. 7 மில்லியன்

அண்மைக் காலங்களில் இக்கம்பனியின் இலாபத்தன்மையானது ஒரு கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. தற்போது இக்கம்பனிக்கு மேலதிக நிதியாக ரூ. 2 மில்லியன் தேவைப்படுகின்றது. சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், தொகுதிக் கடன்கள் நீங்கலாக, இக்கம்பனிக்கான மேலதிக நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமான நிதி மூலம் எது ? உமது விடையைக் காரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) பின்வருவன கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் வரையறுத்த பொதுக்கம்பனிகளுக்குக் கிடைக்கக்கூடிய இரண்டு பட்டியற்படுத்தல் முறைகளாகும்.
1. ஒப்பப்பணத்துக்கான கொடைமுனைவு/ஆரம்பப் பொது வழங்கல் (offer for subscription/initial public offer)
2. விற்பனைக்கான கொடைமுனைவு (offer for sale)

மேற்கூறப்பட்ட இரண்டு பட்டியற்படுத்தல் முறைகளையும் தனித்தனியாக விளக்குக.
(ஆ) முதலீட்டாளர் ஒருவர் பங்குச் சந்தையில், சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் அடைந்து கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பின்வருவது பாடசாலையின் விவாத அணி ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஒரு தலைப்பு ஆகும். **"மனித வளமாயினும் சரி அல்லது ஏனைய வளங்களாயினும் சரி அவை நிறுவனமொன்றுக்கு மிகவும் முக்கியமானவையாகும்".** மனித வளத்திற்குச் சார்பாகப் பேசும் விவாத அணிப் பிரிவை நீர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றீர் என கருதிக் கொள்ளவும்.
ஒரு நிறுவனத்துக்கான மனித வளத்தின் முக்கியத்துவத்தை நியாயப்படுத்துவதற்கு நீர் குறிப்பிடும் அம்சங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வேலை விவரணம் ஒன்றினால் கருதப்படுவது யாது ?
(ஆ) வேலை குறித்துரைத்தல் ஒன்றினால் கருதப்படுவது யாது ?
(இ) அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சி ஒன்றின் மூலம் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ?
(ஈ) வேலை நிறுத்தம் ஒன்றிற்குச் செல்லாமல் தொழிற் சங்கம் ஒன்றினால் மேற்கொள்ளக்கூடிய வேறு **இரண்டு** தொழிற்சங்க நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) செயல்திறன் மதிப்பீட்டை வரையறுப்பதுடன் செயல்திறன் மதிப்பீட்டின் நோக்கங்களை விளக்குக.
(ஆ) பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்புக்கள் எழுதுக.
1. கூட்டுப் பேரம் பேசல்
2. பின்புலப் புலனாய்வு (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

8. (i) பின்வரும் தகவல் முறைமைகளை வரையறுப்பதுடன், வணிக நிறுவனமொன்றில் இத்தகவல் முறைமைகளை எந்நபர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதனையும் குறிப்பிடுக.

1. கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS)
2. நிறைவேற்று உதவி முறைமை (ESS) (04 புள்ளிகள்)

(ii) ஒரு வணிக நிறுவனமானது நவீன தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதனால் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ? (04 புள்ளிகள்)

(iii) பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

1. உலகளாவிய வெப்தளம் (www)
2. புற இணையம் (Extranet) (04 புள்ளிகள்)

(iv) நேரம் மற்றும் செலவினைக் கருத்திற் கொண்டு, சில வணிகர்கள் வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு விருப்பமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வணிகத் திட்டம் பற்றி கற்றறிந்த மாணவன் என்ற வகையில், இவ்வாறான வணிகர்களுக்கு வணிகத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எவ்வாறு அறிவுரை கூறுவீர் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) ஒரு வணிகத்தினால் ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களுக்கும், வணிகத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கும் இடையே எவ்வாறான வித்தியாசங்களை நீர் காணுவீர் ?

(ஆ) வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் ஒரு வணிகன் பல அனுகூலங்களை அடைந்து கொள்ளலாம். அவ்வாறான **நான்கு** அனுகூலங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

* * *

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2012 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

அறிவுறுத்தல்கள்:

※ 1 - 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
※ 31 - 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையை **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
※ ஒவ்வொரு வினாவும் **இரண்டு** புள்ளிகளைக் கொண்டதாகும்.
※ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

சுட்டெண் : ....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.

வினாத்தாள் I இற்காக			கையொப்பம்	குறியீட்டு எண்
வினா இல.	புள்ளிகள்	1 வது பரீட்சகர்		
01 - 30		2 வது பரீட்சகர்		
31 - 50		மேலதிக பிரதம பரீட்சகர்		
மொத்தம்		பிரதம பரீட்சகர்		
		எண்கணிதப் பரீட்சகர்		

1. கணக்கீட்டின் பிரதான குறிக்கோள்
   (1) நிறுவனம் ஒன்றின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் கணக்குப் புத்தகங்களில் பதிதல்.
   (2) நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிதல், வகைப்படுத்தல், சுருக்குதல் ஆகியன.
   (3) நிறுவனம் ஒன்றின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
   (4) முகாமையாளர்களுக்கு நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களின் விபரமான பகுப்பாய்வினை வழங்குதல்.
   (5) நிறுவனம் பற்றிய தகவல்களை அதனைப் பயன்படுத்துவோரின் தீர்மானம் மேற்கொள்ளலுக்காக வழங்குதல். (.........)

2. நிறுவனம் ஒன்றின் கொள்வனவு நாளேட்டில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்களில் எது பதியப்படும் ?
   (1) கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களும்
   (2) மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கொள்வனவுகளும்
   (3) மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கடன் கொள்வனவுகளும்
   (4) கடனுக்கு மீள் விற்பனை செய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எல்லாக் கொள்வனவுகளும்
   (5) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எல்லா ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் (.........)

3. நிறுவனம் ஒன்று ரூபா 500 000 பெறுமதியான பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்தது. இவைகளுள் ரூபா 50 000 பெறுமதியான பொருட்களை அவை குறித்த விபரங்களுக்கு அமையாமையினால் வாடிக்கையாளர்கள் திருப்பி அனுப்பினர். பின்னர் வாடிக்கையாளர்கள் மிகுதித் தொகையைத் தீர்ப்பதற்கு பணம் செலுத்தினர். இக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்களின் வரிசைமுறை பின்வருவனவற்றுள் எது ?
   (1) விலைப்பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   (2) விலைப்பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   (3) விலைப்பட்டியல், நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு
   (4) விலைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   (5) விலைப்பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு (.........)

4. கணக்கீட்டுச் செயன்முறையில் காணப்படும் பின்வரும் நடவடிக்கைகளின் சரியான **ஒழுங்குவரிசை** யாது ?
   A - மூலப் பதிவேடுகளில் பதிதல்
   B - மூல ஆவணங்கள் தயாரிக்கப்படல்
   C - வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுதல்
   D - பரீட்சை மீதி தயாரிக்கப்படல்
   E - பேரேட்டில் பதிவுகளைப் பதிதல்
   (1) B, D, C, A, E (2) C, B, A, E, D (3) C, B, A, D, E
   (4) C, A, B, E, D (5) D, B, C, A, E (.........)

5. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சட்டகத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் **இரண்டு** அடிப்படை எடுகோள்கள் எவை ?
   (1) அலகுசார், அட்டுறு (2) அலகுசார், தொடர்ந்து இயங்குதல்
   (3) அலகுசார், கால அளவீடு (4) அட்டுறு, தொடர்ந்து இயங்குதல்
   (5) கால அளவீடு, பண அளவீடு (.........)

6. விற்பனைக் கிரயத்தை ஒரு செலவினமாகவும் வருட முடிவிலுள்ள சரக்கிருப்பைச் சொத்தொன்றாகவும் மிகச் சிறப்பாக இனம்காணப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு பின்வருவனவற்றுள் எது ?
   (1) தொடர்ந்து இயங்குதல் (2) வரலாற்றுக் கிரயம் (3) இணைதல்
   (4) முன்னெச்சரிக்கை (5) தேறல் (.........)

[பக். 2 ஐப் பார்க்க

7. கம்பனி ஒன்று 10 வருடங்களுக்கு முன்பு நிலமொன்றை வாங்கியது. இன்றுள்ள இதன் நியாயவிலையானது கொள்விலையின் 5 மடங்கு பெறுமதி கொண்டதாகும். நிலமானது நியாயவிலையில் மீள் மதிப்பீடு செய்யப்படுமாயின் இவ்வாறு செய்வதினை பின்வருவனவற்றுள் எக் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் சிறப்பியல்பு பிரதிபலிக்கும் ?
   (1) ஒப்பீட்டுத் தன்மை
   (2) பொருத்தப்பாடு
   (3) நம்பகத் தன்மை
   (4) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
   (5) விளங்கிக்கொள்ளும் தன்மை
   (………)

8. நிறுவனமொன்று குறிப்பிட்ட மாதமொன்றில் இயந்திரமொன்றைப் பராமரிப்பதற்காக ரூபா 8 000 செலுத்தியது. இக் கொடுக்கல் வாங்கலின் தாக்கமானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் பின்வருவனவற்றுள் எவ்வாறு காட்டப்படும் ?
   (1) சொத்துக்களில் ரூபா 8 000 குறைவு, பொறுப்புக்களில் ரூபா 8 000 குறைவு
   (2) சொத்துக்களில் ரூபா 8 000 குறைவு, பொறுப்புக்களில் ரூபா 8 000 அதிகரிப்பு
   (3) சொத்துக்களில் ரூபா 8 000 குறைவு, உரிமையாண்மையில் ரூபா 8 000 குறைவு
   (4) சொத்துக்களில் ரூபா 8 000 குறைவு, உரிமையாண்மையில் ரூபா 8 000 அதிகரிப்பு
   (5) சொத்துக்களில் ரூபா 8 000 குறைவு, சொத்துக்களில் ரூபா 8 000 அதிகரிப்பு
   (………)

9. தனிவியாபாரி ஒருவரின் மூலதனக் கணக்கு மீதியானது குறிப்பிட்ட வருடமொன்றில் ரூபா 500 000 இனால் அதிகரித்துள்ளது. பின்வருவனவற்றுள் எக்கொடுக்கல் வாங்கல் இவ் அதிகரிப்பைப் **பிரதிபலிக்க மாட்டாது** ?
   (1) வியாபாரம் ரூபா 500 000 இலாபத்தை ஈட்டியுள்ளது.
   (2) உரிமையாளர் ரூபா 500 000 இனை புதிய மூலதனமாக இட்டுள்ளார்.
   (3) உரிமையாளர் வியாபாரப் பாவனைக்காக ரூபா 500 000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை வியாபாரத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.
   (4) உரிமையாளர் தனது தனிப்பட்ட கடனுக்காக ரூபா 500 000 இனை நிறுவன வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தினார்.
   (5) உரிமையாளர் வியாபார விநியோகஸ்தருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 500 000 இனைத் தனது சொந்த வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தினார்.
   (………)

10. நிறுவனமொன்று எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்கிறது. இதன் மாதாந்த வங்கிக்கூற்று 31.01.2012 இல் ரூபா 270 000 செலவு மீதியைக் காட்டியது. இத்தினத்தில் வைப்புச் செய்யப்பட்டதும் ஆனால் வங்கியால் வசூலிக்கப்படாததுமான காசோலைகள் மற்றும் வழங்கப்பட்டதும் ஆனால் வங்கியில் சமர்பிக்கப்படாததுமான காசோலைகள் முறையே ரூபா 85 000, ரூபா 45 000 ஆகும். 31.01.2012 இல் புத்தகத்திலுள்ள வங்கி மீதி (வரவு) :
   (1) ரூபா 225 000.
   (2) ரூபா 230 000.
   (3) ரூபா 270 000.
   (4) ரூபா 310 000.
   (5) ரூபா 355 000.
   (………)

11. வியாபாரமொன்றின் வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்ததன் பின்பு பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
   (i) கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு ரூபா 18 500 ஆனது கடன்பட்டோர் கணக்கில் ரூபா 15 800 ஆகப் பதியப்பட்டுள்ளது.
   (ii) கடன்விற்பனை ரூபா 25 000 ஆனது விற்பனைக் கணக்கில் ரூபா 2 500 என செலவு வைக்கப்பட்டுள்ளது.
   (iii) விற்பனைத் திரும்பல் ரூபா 3 000 ஆனது விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
   இவ்வழுக்கள் காரணமாக நிறுவனத்தின் இலாபம் எவ்வளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது ?
   (1) ரூபா 18 500.
   (2) ரூபா 22 500.
   (3) ரூபா 25 200.
   (4) ரூபா 25 500.
   (5) ரூபா 28 200.
   (………)

12. கம்பனியானது 31.03.2012 இல் சரக்கிருப்புக்களின் மூன்று உருப்படிகள் தொடர்பாகப் பின்வரும் தகவல்களை வழங்கியது.

உருப்படி	உற்பத்திக் கிரயம் (ரூபா)	எதிர்பார்க்கப்படும் விற்பனை (ரூபா)	எதிர்பார்க்கப்படும் விற்பனைச் செலவுகள் (ரூபா)
A	13 000	15 000	5 000
B	10 000	16 000	4 000
C	17 000	19 000	7 000

   'உருப்படி' அடிப்படையில் 31.03.2012 இல் சரக்கிருப்புகளின் பெறுமதி என்ன ?
   (1) ரூபா 32 000.
   (2) ரூபா 34 000.
   (3) ரூபா 40 000.
   (4) ரூபா 42 000.
   (5) ரூபா 50 000.
   (………)

● **நிறுவனம் ஒன்று தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

(i) சம்பளங்கள்:

	ரூபா
31.03.2012 இல் முடிவடைந்த வருடத்தில் செலுத்தியது	44 000
செலுத்தப்பட வேண்டியது - 31.03.2011 இல்	4 000
- 31.03.2012 இல்	24 000

(ii) வாடகை வருமானம்:
01.10.2011 இல் வாடகைக்கு விடப்பட்ட கட்டிடமொன்றிலிருந்து 30.06.2012 இல் முடிவடையும் 9 மாதங்களுக்காக ரூபா 90 000 வாடகை பெறப்பட்டது.

13. 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்றில் பதியப்படவேண்டிய சம்பளங்கள், வாடகை வருமானம் பின்வருவனவற்றுள் எது ?

	சம்பளங்கள் (ரூபா)	வாடகை வருமானம் (ரூபா)
(1)	24 000.	30 000.
(2)	28 000.	30 000.
(3)	44 000.	60 000.
(4)	64 000.	60 000.
(5)	64 000.	90 000.

   (………)

[பக். 3 ஐப் பார்க்க

14. 31.03.2012 இல் உள்ளவாறான ஐந்தொகையில் மேற்கூறியவை தொடர்பில் இனங்காணப்படவேண்டிய மொத்தப் பொறுப்புக்கள் எவ்வளவு ?
(1) ரூபா 20 000. (2) ரூபா 24 000. (3) ரூபா 30 000.
(4) ரூபா 54 000. (5) ரூபா 60 000. (.........)

● **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 15 ஆம், 16 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

01.04.2011 இல் அமிலன், கபிலன் ஆகிய இருவரும் பின்வரும் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு பங்குடைமையை ஆரம்பித்தனர்.
(அ) ஒவ்வொரு பங்காளரும் வருடாந்த சம்பளமாக ரூபா 100 000 பெற உரித்துடையவர்.
(ஆ) பங்காளர்கள் தமது மூலதனக் கணக்கு மீதிகளுக்கு 10% வட்டி பெற உரித்துடையவர்.
(இ) இலாப நட்டங்கள் முறையே 3:2 எனும் விகிதத்தில் பகிர்வு செய்தல்.
அமிலனும் கபிலனும் முறையே ரூபா 400 000, ரூபா 200 000 காசை மூலதனமாகக் கொடுத்துள்ளனர்.
31.03.2012 இல் முடிவடைந்த வருடத்தில் பங்குடைமை ஆனது ரூபா 360 000 தேறிய இலாபம் ஈட்டியுள்ளது.

15. 31.03.2012 இல் உள்ளவாறான அமிலன், கபிலன் ஆகியோரின் நடைமுறைக் கணக்கு மீதிகள் எவ்வளவு ?

	அமிலன் (ரூபா)	கபிலன் (ரூபா)
(1)	140 000.	120 000.
(2)	160 000.	140 000.
(3)	200 000.	160 000.
(4)	216 000.	144 000.
(5)	600 000.	360 000.

(.........)

16. இவ்வருடத்தில் அமிலன், கபிலன் ஆகிய ஒவ்வொருவரும் ரூபா 50 000 பற்றுதல்களைச் செய்திருப்பார்களாயின் 31.03.2012 இல் பங்குடைமையின் உரிமையாண்மை எவ்வளவாக இருக்கும் ?
(1) ரூபா 260 000. (2) ரூபா 500 000. (3) ரூபா 600 000.
(4) ரூபா 660 000. (5) ரூபா 860 000. (.........)

17. பங்குடைமையொன்றினை அமல், விமல், சலீம் ஆகிய மூவரும் இலாப நட்டங்களை 2:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து நடாத்தினர். 31.03.2012 இல் சலீம் பங்குடைமையிலிருந்து விலகினார். அமலும் விமலும் இலாப நட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பகிர்ந்து பங்குடைமையைத் தொடர்ந்து நடாத்தத் தீர்மானித்தனர். இத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூபா 400 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. 31.03.2012 இல் அமல், விமல் ஆகியோர்களது மூலதனக் கணக்குகளில் இந்த நன்மதிப்புச் சீராக்கத்தின் விளைவாக ஏற்பட்ட தேறிய தாக்கம் எவ்வளவு ?

	அமல்	விமல்
(1)	தாக்கம் இல்லை.	தாக்கம் இல்லை.
(2)	ரூபா 80 000 குறைவு.	தாக்கம் இல்லை.
(3)	தாக்கம் இல்லை.	ரூபா 80 000 குறைவு.
(4)	ரூபா 160 000 அதிகரிப்பு.	ரூபா 160 000 அதிகரிப்பு.
(5)	ரூபா 240 000 குறைவு.	ரூபா 160 000 குறைவு.

(.........)

18. வரையறுக்கப்பட்ட பாலா பொதுக்கம்பனி 500 000 சாதாரண பங்குகளை வழங்கியிருந்தது. 01.04.2011 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு ரூபா 10 000 000 மீதியாகக் காட்டியது. கம்பனியானது 01.07.2011 இல் காணப்படும் ஒவ்வொரு **5** பங்குகளுக்கு **1** பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 20 விலையில் வழங்கி நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்கியது. மேலும் 01.01.2012 இல் காணப்படும் ஒவ்வொரு **6** பங்குகளுக்கு **1** பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 15 விலையில் உரிமை வழங்கல் செய்தது. எல்லாப் பங்குதாரர்களும் தமது உரிமைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக 31.03.2012 இல் உள்ளவாறான கம்பனியின் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு யாது ?
(1) ரூபா 2 000 000 குறைவு. (2) ரூபா 500 000 குறைவு. (3) ரூபா 1 500 000 அதிகரிப்பு.
(4) ரூபா 2 000 000 அதிகரிப்பு. (5) ரூபா 3 500 000 அதிகரிப்பு. (.........)

19. பின்வரும் விகிதங்களில் எவை முறையே நிறுவனமொன்றின் **நிதி உறுதித் தன்மை** (stability), **திரவத்தன்மை** ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு முறையே பயன்படுத்தப்படும் ?
(1) கடன் – உரிமையாண்மை விகிதமும் நடைமுறை விகிதமும்
(2) விரைவு விகிதமும் கடன்பட்டோர் புரள்வு விகிதமும்
(3) வட்டிக்காப்பு விகிதமும் மொத்த சொத்துப் புரள்வு விகிதமும்
(4) மொத்த சொத்து மீதான வருவாய் விகிதமும் நடைமுறை விகிதமும்
(5) கடன் விகிதமும் மொத்த சொத்துப் புரள்வு விகிதமும் (.........)

20. கடன்பட்டோரில் ஒருவர் தனது மீதியைத் தீர்க்கும்போது கம்பனியொன்றின் நடைமுறை விகிதம், விரைவு விகிதம் ஆகியவைகளில் ஏற்படும் தாக்கம் என்ன ?

	நடைமுறை விகிதம்	விரைவு விகிதம்
(1)	குறைவு	குறைவு
(2)	அதிகரிப்பு	அதிகரிப்பு
(3)	அதிகரிப்பு	குறைவு
(4)	குறைவு	அதிகரிப்பு
(5)	மாற்றமில்லை	மாற்றமில்லை

(.........)

[பக். 4 ஐப் பார்க்க

21. 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியொன்றின் பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	ரூபா
கடன் விற்பனைகள்	780 000
கடன்பட்டோருக்கு அனுமதித்த கழிவுகள்	65 000
பதிவழிக்கப்பட்ட அறிவிடமுடியாக்கடன்கள்	20 000
விற்பனைத் திரும்பல்கள்	35 000
குறிப்பிட்ட வருடத்தில் கடன்பட்டோர் மீதியில் ஏற்பட்ட குறைவு	80 000

31.03.2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு எவ்வளவு ?

(1) ரூபா 580 000. (2) ரூபா 660 000. (3) ரூபா 695 000.
(4) ரூபா 715 000. (5) ரூபா 740 000. (.........)

22. பின்வருவனவற்றில் எவை நிறுவனமொன்றில் நிகழத்தக்க பொறுப்புக்களாக வெளிப்படுத்த முடியும் ?

A - நிதி நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற கடன்
B - நிறுவனத்திற்கு எதிரான தீர்க்கப்படாத வழக்கு
C - இன்னொரு நிறுவனத்தினால் பெறப்பட்ட கடன் ஒன்றிற்கு ஓர் உத்தரவாளராகச் செயற்படுவதற்கான உடன்படிக்கையொன்று
D - வங்கிக் கணக்கொன்றின் மேலதிகப்பற்று மீதி

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம். (3) B, C ஆகியன மாத்திரம்.
(4) A, B, D ஆகியன மாத்திரம். (5) A, B, C ஆகியன மாத்திரம். (.........)

23. வரையறுக்கப்பட்ட மதுரா பொதுக்கம்பனியின் 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களுக்கு 30.06.2012 இல் அதன் இயக்குனர்கள் அங்கீகாரம் அளித்தனர். இக்கம்பனி தொடர்பில் 01.04.2012 இற்கும் 30.06.2012 இற்கும் இடையிலான காலப்பகுதியில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

A - தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவிக்கும் வியாபாரத்தின் அலகொன்றின் செயற்பாட்டை நிறுத்துவதற்கான திட்டமொன்றின் அறிவிப்பு
B - ஐந்தொகைத் திகதியிலுள்ள முறிவடைந்த கடன்பட்டவர் ஒருவரிடமிருந்து வரவேண்டிய கணிசமான தொகை
C - சந்தைவிலை வீழ்ச்சியினால் குறுங்கால முதலீடுகளின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி
D - ஐந்தொகைத் திகதியிலுள்ள பொறுப்பொன்றினை இனங்காண்பதை உறுதிசெய்த வழக்கொன்றின் தீர்ப்பு

மேற்கூறியவற்றுள் எவை ஐந்தொகைத் திகதியில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும் ?

(1) A, C ஆகியன மாத்திரம். (2) B, D ஆகியன மாத்திரம்.
(3) A, B, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகிய எல்லாம். (.........)

24. கட்டிடமொன்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு வாழ்வுக்காலத்தை மீள்மதிப்பீடு செய்யும்போது அதனால் அச்சொத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வில் ஏற்படும் மாற்றம் நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு பதியப்படும் ?

(1) கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமொன்றாகக் கருதி நடைமுறை மற்றும் எதிர்காலங்களுக்கான இலாபம் அல்லது நட்டத்தில் சீராக்கம் செய்யப்படும்.
(2) கணக்கீட்டு மதிப்பீட்டின் மாற்றமொன்றாகக் கருதி, நிறுத்திவைத்த வருவாய்களின் ஆரம்ப மீதி மீள் குறிப்பிடப்படும்.
(3) வழு ஒன்றாகக் கருதி நிறுத்திவைத்த வருவாய்களின் ஆரம்ப மீதி மீள் குறிப்பிடப்படும்.
(4) வழு ஒன்றாகக் கருதி நடைமுறைக் காலத்திற்குரிய இலாபம் அல்லது நட்டம் சீராக்கம் செய்யப்படும்.
(5) கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றமொன்றாகக் கருதி, நிறுத்திவைத்த வருவாய்களின் ஆரம்ப மீதி மீள் குறிப்பிடப்படும். (.........)

25. கம்பனியொன்று 31.03.2010 இல் ரூபா 1 300 000 கிரயத்தில் நிலமொன்றைக் கொள்வனவு செய்தது. இந்நிலமானது 31.03.2011 இல் இதன் நியாயவிலை ரூபா 1 100 000 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மீண்டும் இந்நிலமானது 31.03.2012 இல் அதன் நியாயவிலை ரூபா 1 600 000 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் இம் மீள்மதிப்பீடுகள் எவ்வாறு அறிக்கையிடப்பட்டுள்ளது ?

	31.03.2011 இலுள்ளவாறு	**31.03.2012** இலுள்ளவாறு
(1)	ரூபா 200 000 நட்டம் இனம் காணப்பட்டுள்ளது.	ரூபா 200 000 இலாபம் இனம் காணப்பட்டும் மிகுதித் தொகை ரூபா 300 000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாகவும் கருதப்பட்டுள்ளது.
(2)	ரூபா 200 000 நட்டம் இனம்காணப்பட்டுள்ளது.	ரூபா 500 000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக இனம்காணப்பட்டுள்ளது.
(3)	ரூபா 200 000 நட்டம் இனம்காணப்பட்டுள்ளது.	ரூபா 200 000 இலாபம் இனங்காணப்பட்டுள்ளது.
(4)	ரூபா 200 000 நட்டமானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளது.	ரூபா 500 000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக இனம்காணப்பட்டுள்ளது.
(5)	ரூபா 200 000 நட்டமானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளது.	இலாபம் ரூபா 200 000 என இனம்காணப்பட்டும், மிகுதித் தொகை ரூபா 300 000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாகவும் கருதப்பட்டுள்ளது.

(.........)

[பக். 5 ஐப் பார்க்க

26. உற்பத்திப் பொருளொன்றின் உற்பத்திக் கிரயம் பின்வருவனவற்றுள் எதற்குச் சமனானது ?
    (1) நேர்க்கிரயங்கள் மற்றும் மேந்தலைக் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு
    (2) மூலப்பொருட் கிரயங்கள் மற்றும் ஊழியக் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு
    (3) மூலக்கிரயம் மற்றும் உற்பத்தி மேந்தலைக் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு
    (4) மூலக்கிரயம் மற்றும் உற்பத்திக் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு
    (5) உற்பத்திக் கிரயம் மற்றும் உற்பத்தியல்லாக் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு (.........)

27. மூலப்பொருள் 'X' இன் காலாண்டுக்கான கேள்வி 1 250 அலகுகள் ஆகும். இம்மூலப்பொருளின் அலகொன்றிற்கான கொள்விலை ரூபா 250 ஆகும். கட்டளையொன்றுக்கான கட்டளைக்கிரயம் ரூபா 25 ஆகவும் இருப்பு வைத்திருத்தற் கிரயமானது மூலப்பொருளின் அலகொன்றிற்கான கொள்விலையில் 10% ஆகவும் உள்ளது. இம்மூலப்பொருளின் சிக்கனக் கட்டளைத் தொகையானது பின்வருவனவற்றுள் எது ?
    (1) 50 அலகுகள் (2) 100 அலகுகள் (3) 1 000 அலகுகள்
    (4) 2 500 அலகுகள் (5) 5 000 அலகுகள் (.........)

28. கம்பனியொன்று தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இதன் அலகொன்றிற்கான விற்பனை விலை ரூபா 75 ஆகவும் அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூபா 50 ஆகவும் உள்ளது. நிலையான கிரயங்கள் ரூபா 50 000 ஆகும். சமப்பாட்டுப் புள்ளி (அலகுகளில்) மற்றும் 5 000 அலகுகள் விற்பனை மட்டத்தில் பாதுகாப்பு எல்லை (ரூபாவில்) என்பன முறையே பின்வருவனவற்றுள் எது ?
    (1) 2 000 அலகுகளும் ரூபா 50 000 (2) 2 000 அலகுகளும் ரூபா 225 000
    (3) 3 000 அலகுகளும் ரூபா 75 000 (4) 3 000 அலகுகளும் ரூபா 225 000
    (5) 5 000 அலகுகளும் ரூபா 375 000 (.........)

29. உற்பத்தி நிறுவனமொன்றின் சமப்பாட்டுப் புள்ளி தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை ?
    A - இலாபம் அன்றேல் நட்டம் இல்லை.
    B - மொத்த பங்களிப்பானது மொத்த நிலையான கிரயங்களுக்குச் சமன்.
    C - விற்பனை வருமானங்கள் ஆனது மொத்த கிரயங்களுக்குச் சமன்.
    D - விற்பனை வருமானங்கள் ஆனது மொத்த மாறும் கிரயங்களுக்குச் சமன்.
    E - மொத்த நிலையான கிரயங்கள் ஆனது மொத்த மாறும் கிரயங்களுக்குச் சமன்.
    (1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
    (3) A, B, C, D ஆகியன மாத்திரம். (4) A, C, D, E ஆகியன மாத்திரம்.
    (5) A, B, C, D, E ஆகிய எல்லாம். (.........)

30. கம்பனியொன்றின் புதிய செயற்றிட்டத்தின் காசுப் பாய்ச்சல்களைக் கணிக்கும்போது பின்வருவனவற்றுள் எவ்விடயங்கள் உள்ளடக்கப்படும் ?
    A - இச்செயற்றிட்டத்தில் பயன்படுத்துவதற்கெனப் பெறப்பட்ட இயந்திரத்தின் கிரயம்
    B - இந்த இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு
    C - இந்த இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எஞ்சிய பெறுமதி
    D - இச்செயற்றிட்டத்தின் காரணமாக ஏற்படும் செயற்பாட்டுக் கிரயங்கள்
    E - இச்செயற்றிட்டத்திற்கான சந்தை ஆய்வினை மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்
    (1) A, B, D ஆகியன மாத்திரம். (2) A, C, D ஆகியன மாத்திரம்.
    (3) A, C, E ஆகியன மாத்திரம். (4) A, D, E ஆகியன மாத்திரம்.
    (5) A, B, C, D, E ஆகிய எல்லாம். (.........)

● **31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்க விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31. நிதிக் கணக்கீடு, முகாமைக் கணக்கீடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை பின்வரும் அம்சங்கள் தொடர்பில் குறிப்பிடுக.

அம்சங்கள்	நிதிக் கணக்கீடு	முகாமைக் கணக்கீடு
(1) தகவல்களைப் பயன்படுத்துவோர்	....	....
(2) அறிக்கையிடும் தடவைகள்	....	....

32. தனி வியாபாரமொன்றின் குறித்த வருடம் ஒன்றில் அதன் சொத்துக்கள் ரூபா 400 000 ஆல் அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 50 000 ஆல் அதிகரித்தும் உள்ளன. இவ்வருடத்திற்கான இலாபம் ரூபா 250 000 ஆகக் காணப்படின் உரிமையாளரால் அறிமுகப்படுத்திய மேலதிக மூலதனம் எவ்வளவு ?

....

[பக். 6 ஐப் பார்க்க

33. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட **இரண்டு** சட்டரீதியான நிறுவனங்கள் எவை ?

(1) .... (2) ....

34. நிறுவனமொன்றில் பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உடன்பட்டுள்ள கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் சிறப்பியல்பு யாது ?

சூழ்நிலை	பண்புசார் சிறப்பியல்பு
(அ) உபகரணம் நேர்கோட்டு முறையில் ஒவ்வொரு வருடமும் பெறுமானத்தேய்விடப்படுகின்றது.	....
(ஆ) நிதிக் குத்தகையின் கீழ் நிறுவனமொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உபகரணமொன்று அதன் சொத்தாகப் பதியப்பட்டுள்ளது.	....

35. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மிகவும் தொடர்புடைய **கணக்கீட்டு எண்ணக்கருவினை** அடையாளம் காண்க.

A - வருமானமானது உழைக்கப்படும்போது அது கம்பனியின் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

B - நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் நோக்கத்திற்காகக் கம்பனியொன்றின் வாழ்வுக் காலமானது ஒவ்வொரு 12 மாதங்கள் கொண்ட காலப்பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

C - கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் பணவீக்கத்திற்கான சீராக்கங்கள் செய்யப்படுவதில்லை.

D - ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாதக் கோரிக்கை தொடர்பில் கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்படும்.

விடயம்	கணக்கீட்டு எண்ணக்கரு
A	....
B	....
C	....
D	....

36. இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் 'கொள்ளல் கொடுத்தல் கணக்கு', 'வருமானச் செலவுக் கணக்கு' என்பனவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை அவைகள் தயாரிக்கப்படும் நோக்கம், அடிப்படைகள் ஆகியன தொடர்பில் குறிப்பிடுக.

	கொள்ளல் கொடுத்தல் கணக்கு	வருமானச் செலவுக் கணக்கு
நோக்கம்	....	....
அடிப்படை	....	....

- **37 ஆம் 38 ஆம் வினாக்களுக்கு விடைஎளிக்கும்போது பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றிற்கு 2012 மார்ச்சில் ஏற்பட்ட ரூபா 60 000 தொகையான அலுவலகச் செலவானது, அலுவலக உபகரணக் கணக்கில் ரூபா 600 000 ஆகப் பதியப்பட்டுள்ளது. அலுவலக உபகரணமானது வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் கிரயத்தில் பெறுமானத்தேய்விடப்படுகிறது. உபகரணத்திற்கு அந்த மாதத்திற்கான பெறுமானத்தேய்வும் செய்யப்பட்டுள்ளது.

37. 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபத்தில் இப்பிழையினால் ஏற்பட்ட தேறிய விளைவு என்ன ?

....

38. அலுவலக உபகரணங்கள், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கான பேரேட்டுக் கணக்குகளைச் சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

....

....

....

[பக். 7 ஐப் பார்க்க

39. கமல் வியாபாரமானது 31.03.2012 இல் காணப்பட்ட தனது முழு சரக்கிருப்புக்களையும் தீயினால் இழந்துள்ளது. பின்வரும் தகவல்கள் அத்தினத்தில் கிடைக்கப்பெற்றன.

01.04.2011 இல் சரக்கிருப்பு	ரூபா	200 000
குறித்த வருடத்தில் செய்த கொள்வனவுகள்	ரூபா	1 500 000
குறித்த வருடத்திற்கான விற்பனைகள்	ரூபா	2 000 000

நிறுவனத்தின் விற்பனையில் மொத்த இலாபம் 20% ஆகும்.

(அ) தீயினால் அழிவடைந்த சரக்குகளின் பெறுமதி என்ன ?

....

(ஆ) காப்புறுதிக் கம்பனியானது அழிவடைந்த சரக்குகளின் பெறுமதியில் 80% இனைத் தருவதாக ஒப்புக்கொள்ளுமாயின், கம்பனியின் 31.03.2012 இல் உள்ளவாறான மொத்தச் சொத்துக்கள் மீதான தேறிய விளைவு யாது ?

....

● **40 ஆம் 41 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் 2012 பெப்ரவரி மாதத்துடன் தொடர்பானவை.

	ரூபா
மூலப்பொருள் கொள்வனவு	300 000
நேர் ஊழியம்	170 000
நேர்ச் செலவுகள்	30 000
உற்பத்தி மேந்தலைகள்	300 000

சரக்கிருப்பு	**29.02.2012 (ரூபா)**	**31.01.2012 (ரூபா)**
மூலப்பொருள்	50 000	100 000
குறைவேலை	150 000	100 000
முடிவுப்பொருள்	100 000	180 000

- குறைவேலைகள் உற்பத்திக் கிரயத்தில் சீராக்கம் செய்யப்படுகின்றன எனக் கருதுக.
- உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனைக் கிரயத்தில் 25% இலாபம் வைத்து விற்கப்படுகின்றன.

40. 2012 பெப்ரவரி மாதத்திற்கான மூலக்கிரயம், உற்பத்திக் கிரயம் ஆகியன எவ்வளவு ?

(அ) மூலக்கிரயம்: .... (ஆ) உற்பத்திக் கிரயம்: ....

41. இம்மாதத்தில் உழைக்கப்பட்ட மொத்த இலாபம் என்ன ?

....

● **42 ஆம் 43 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
வரையறுக்கப்பட்ட மதன் பொதுக்கம்பனியின் 31.03.2012, 31.03.2011 இல் உள்ளவாறான ஐந்தொகைகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பொறி மற்றும் இயந்திரம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	31.03.2012 (ரூபா '000)	**31.03.2011 (ரூபா '000)**
பொறி மற்றும் இயந்திரங்கள் - கிரயத்தில்	1 500	1 000
திரண்ட பெறுமானத்தேய்வு	500	400

மேலதிகத் தகவல்கள்:

கம்பனியானது ரூபா 300 000 கிரயம் கொண்ட இயந்திரமொன்றை 31.03.2012 இல் ரூபா 160 000 இற்கு விற்பனை செய்தது. இத்திகதியில் இவ் இயந்திரத்தின் கொண்டுசெல் மீதி ரூபா 200 000 ஆகும். மேலும் அதே தினத்தில் புதிய இயந்திரமொன்று காசுக்கு வாங்கப்பட்டது.

42. 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்தில் பொறி மற்றும் இயந்திரம் தொடர்பில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல்களைக் குறிப்பிடுக.

(அ) காசு உட்பாய்ச்சல் ....

(ஆ) காசு வெளிப்பாய்ச்சல் ....

43. மேற்படி கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ஏற்பட்ட காசற்ற விடயத்தைக் (பெறுமதியுடன்) குறிப்பிடுக.

....

[பக். 8 ஐப் பார்க்க

44. 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியின் செயற்பாடுகள் காரணமாக அதன் வேலைத்தளம் (நிலம்) மாசடைந்திருந்தது. இப்பகுதிக்கான சூழல் பாதுகாப்பு அதிகாரசபையானது கம்பனி இந்நிலத்தைத் துப்பரவு செய்தல் வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது. இதனை மேற்கொள்ள கம்பனிக்கு கணிசமான அளவு காசு தேவைப்படும். கம்பனியினால் 31.03.2012 இல் முடிவடைந்த வருடத்திற்கு இதன்பொருட்டு ஏற்பாடொன்று செய்யப்பட வேண்டுமா என்பதை காரணங்களுடன் குறிப்பிடுக.

....

....

....

....

45. சப்பாத்து உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு கிரயங்களையும் **நேர்க்கிரயம்** அல்லது **நேரில் கிரயம்** என வகைப்படுத்துக.

(அ) பதனிடப்பட்ட தோலின் கிரயம் ....

(ஆ) தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் ....

(இ) இயந்திர இயக்குனர்களின் கூலிகள் ....

(ஈ) இயந்திரப் பெறுமானத்தேய்வு ....

46. கம்பனியொன்றின் இரண்டு உற்பத்தி மட்டங்கள் தொடர்பான கிரயத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

கிரய விடயம்	10 000 அலகுகள் (ரூபா)	20 000 அலகுகள் (ரூபா)
நேர் ஊழியம்	30 000	60 000
மின்சாரம்	10 000	15 000
தொழிற்சாலை வாடகை	15 000	15 000

ஒவ்வொரு கிரய விடயத்தையும் நிலையான கிரயம், மாறும் கிரயம், அரைமாறும் கிரயம் என வகைப்படுத்துக.

கிரய விடயம்	வகை
(அ) நேர் ஊழியம்	:..
(ஆ) மின்சாரம்	:..
(இ) தொழிற்சாலை வாடகை	:..

● **47 ஆம் 48 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்று தனிப்பொருள் ஒன்றை வாங்கி விற்பனை செய்கிறது. அலகொன்றிற்கான விற்பனை விலை ரூபா 250 ஆகும். 01.07.2012 இலுள்ள ஆரம்ப இருப்பானது அலகு ஒன்று ரூபா 150 விலையில் 100 அலகுகளைக் கொண்டு காணப்பட்டது. கம்பனியானது 10.07.2012 இல் அலகு ஒன்று ரூபா 200 விலையில் 150 அலகுகளை கொள்வனவு செய்தது. இக்கம்பனியால் 31.07.2012 இல் 200 அலகுகள் விற்கப்பட்டன.

47. 'முதல் - உள் முதல் - வெளியே' (FIFO) விலையிடல் முறையானது சரக்குகளை விநியோகிக்கும்போது பயன்படுத்தப்பட்டிருப்பின் பின்வருவனவற்றைக் கணிக்க.

(அ) 2012 யூலை மாதத்திற்கான விற்பனைக் கிரயம் ....

(ஆ) 31.07.2012 இலுள்ள சரக்கிருப்பின் பெறுமதி ....

48. நிறையிடப்பட்ட சராசரி விலையிடல் முறையானது சரக்குகளை விநியோகிக்கும்போது பயன்படுத்தப்பட்டிருப்பின் 2012 யூலை மாதத்திற்கான மொத்த இலாபம் என்ன ?

....

49. கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் தனிப்பொருள் தொடர்பான பாதிட்ட வருமானங்கள், கிரயங்கள் பின்வருமாறு: விற்பனைத் தொகை 20 000 அலகுகள்; அலகொன்றிற்கான விற்பனை விலை - ரூபா 20; பங்களிப்பு - விற்பனை விகிதம் - 40% ; நிலையான கிரயங்கள் - ரூபா 100 000

கணிக்குக:

(அ) சமப்பாட்டுப் புள்ளி (அலகுகளில்) ....

(ஆ) பாதிடப்பட்ட விற்பனைத் தொகையில் இலாபம் ....

50. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் முதலீட்டுச் செயற்றிட்டமொன்றுடன் தொடர்பான பின்வரும் ஒவ்வொரு விடயமும் அதன் தேறிய நிகழ்காலப் பெறுமதியை **அதிகரிக்குமா, குறைக்குமா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) எதிர்பார்க்கப்பட்ட காசு உட்பாய்ச்சலில் அதிகரிப்பு ....

(ஆ) கழிவீட்டு வீதத்தில் அதிகரிப்பு ....

(இ) ஆரம்ப முதலீட்டில் குறைவு ....

(ஈ) சொத்துக்களின் எஞ்சிய பெறுமதியில் குறைவு ....

* * *